சங்கானை இளைப் தாக்குதல்வழக்கு:

# பொலிசார் உட்பட நால்வருக்கு கடுழியச்சிறை: ஐந்தாம் எதிரிக்கு ஒத்திவைப்புசிறை!


பக்கங்கள். 8 விலை சதம் 40 ★

ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 வைகாசி 19 ஜ: ஆசிர்: 13 இதழ்: 110

யாழ்ப்பாணம் புதன்கிழமை 1-6-77


யாழ்ப்பாணம், புதன் சங்கானை இளைப் தாக்குதல் வழக்கில் பொலிசார் உட்பட நான்கு எதிரிகளுக்கு 6மாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்து மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எம். டி. ஜேசு ரட்ணம் நேற்று தீர்ப்புவழங்கினர்.

5ம் எதிரிக்கும் (கான்ஸ்டபிள் ஜெயவர்த்தன) ஒத்தி வைக்கப்பட்டி 6 மாதக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்த நீதிபதி அத்தண்டனையை 5 வருடகாலதத்திற்கு ஒத்தி வைத்தார்.

## நீதிபதி கூறியது

''பொலிசாரே இவ்விதமாக நடந்து கொண்டால் பொது மக்கள் தமக்குஏற்படும் இன்னல்களை எவரிடம் சென்று முறையிடுவது?'' என்று நீதிபதி தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டார்.

இவ்வழக்கில் சங்கானையில் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும் 'சன்றைஸ் ஸ்போட்ஸ் கிளப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து சேதம் விளைவித்ததுடன் உரிமையாளர் என்.ரவீந்திரகுலசிங்கத்திற்குக் காயம் விளைவித்தாகவும் செல்லத்துரை சோணன் செனிவரத்ன, ரணவக்க, நாகேசு. ஜெயவர்த்தன ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர்.ஈ. தம்பிரத்தினம் 2ம், 3ம்,எதிரி சார்பில்சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், 4ம, 5ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். நடராசா ஆகியோர் ஆஜரானார்கள்.

சட்டத்தரணி ஏ. அன்ரனி, இன்ஸ்பெக்டர் கே. பதுமநாதன் உதவியுடன் வழக்கை நடத்தினர்.

முதல் நான்கு எதிரிகளுக்கும் 3 குற்றச்சாட்டுகளுக்கும்; தலா 6 மாதக்கடுழிய சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டு ஏககாலத்தில் அனுபவிக்கவேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டது.

5ம் எதிரிக்கு 4 குற்றச்சாட்டுகளுக்கும் தலா 6 மாத கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும் இத்தண்டனையை 5 வருடம் ஒத்திவைத்தும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

## அப்பீல் செய்வர்

எதிரிகள்தாம் அப்பீல் செய்யப்போவதாகத் தெரிவித்ததனையடுத்து நீதிபதி தலா 2 000 ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கினர். (உ-க)

# 'டபிள்' செல்வது இன்றுமுதல்தடை

## மீறுவோர்மீது நடவடிக்கை

### தடையை நீக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணத்தில் சைக்கிளில் டபிள் செல்வது இன்று முதல் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறுவோர் சட்ட [illegible] உள்ளாக்கப்படுவர்.

வீதி விபத்துக்கள் அதிகரிப்பதே இத்தடை விதிப்பதற்கான காரணமென்று யாழ். போக்குவரத்துப் பொலிசார் அறிவித்துள்ளது தெரிந்[illegible] மகளுர்.

இதேவேளை 'டபிள் செல்வதை தடை செய்யவேண்டாம்' என்று கோரி நூற்றுக்கணக்கான [illegible]ர்கள் யாழ். [illegible] மகளுர் ஒன்றைக் கையளித்தனர்.

இவர்கள் தம்தம் கரங்களில் '[illegible]' [illegible] வயிற்றில்அடிக்காதீர் என எழுதப்பட்ட சுலோகங்களை தாங்கிச் சென்றனர். (கி-உ)

கிளிநொச்சித் தொகுதியில்

## கூட்டணிப்பிரசாரம் இன்று ஆரம்பம்

### பரந்தனிலிருந்து ஊர்வலம்

யாழ்ப்பாணம். புதன் கிளிநொச்சித் தொகுதிக் கூட்டணி வேட்பாளர் திரு. வி. ஆனந்தசங்கரியை ஆதரித்து முதலாவது பிரசாரக் கூட்டம் இன்றுமாலை கிளிநொச்சி முற்றவெளி மைதானத்தில் நடைபெற விருக்கிறது.

பரந்தனிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி கூட்டமைதானத்தை அடையும்.

கூட்டணி செயல் அதிபர்களான திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. எம். சிவசிதம்பரம் அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க கிளிநொச்சி கிளை தலைவர் திரு. நா. சோதிநாதன், கிளிநொச்சித் தொகுதி ஆசிரியர் சங்கத்தலைவர் திரு. கா. நாகலிங்கம், முன்னாள் பட்டின சபைத்தலைவர் திரு. த. சு. முருகேசு, கரைச்சிக் கிராம சபைத்தலைவர், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மற்றும் கூட்டணி வேட்பாளர்கள் பலர் உரையாற்றுவர். (அ)

கோக்குவிலில்

## 'சிவா'வுக்கு இன்றுவரவேற்பு

யாழ்ப்பாணம், புதன் நல்லூர்த் தொகுதிக் கூட்டணி அபேட்சகர் திரு. மு. சிவசிதம்பரத்திற்கு கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலடியில் இன்றுமாலை வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

திரு. சி. பொ. வேலாயுத

(8-ம் பக்கம் பார்க்க)

ஆயுர்வேதமாணவர் உண்ணாவிரதம்:

## ஒருவர் மயக்க நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், புதன் யாழ்.லங்கா சித்தஆயுர்வேத கல்லூரி வாசலில் உண்ணாவிரதம் இருந்துவரும் 7 மாணவர்களில் ஒருவரான அமிர்தலிங்கம் நேற்று மயங்கி விழுந்து உடனடியாக யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத் தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி [illegible] [illegible] களை நேரில் பார்த்தறிந்ததோடு, அதிபருடன் பேச்சுவார்த்தைநடத்தினர்.

யாழ் லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி கடந்த இரண்டு ஆண்டுகளாக எந்தவித அபிவிருத்தியும் இன்றியிருப்பதுடன் மாணவர்கட்கு அத்தியாவசியமான மருந்தகம், வைத்தியசாலை, நூலகம் போன்றவை அறவே இல்லாது இருந்தும் கல்லூரியை அரசாங்கம் அங்கீகரிப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமையும், இயக்குநர் சபைக்கு எதிராகத் தொடங்கப்பட்டுள்ள வழக்குகள்யாவும் வாபஸ் பெறப்படும் பட்சத்தில் பிரச்னைகள்யாவும் சுமுகமாகத் தீர்க்கப்படும்என மாணவர்களும், பெற்றோர்களும் பொதுமக்களும் மிகுந்த நம்பிக்கைகொண்டுள்ளதால். உடனடியாக வழக்குகளை வாபஸ் பெறும்படி கோரியும் இவற்றை ஏற்க மறுத்துவரும் நிர்வாக அதிகாரி, திரு. அ. செங்காதரன் இக்கல்லூரியில் வகித்துவரும் சகல பதவியில் இருந்தும் ராஜினாமாச் செய்யவேண்[illegible] கோரிக்கையை முன்[illegible] இக்கல்லூரி மாண[illegible] திரு. சிவரா[illegible] [illegible] கம், எம். பரமானந்தம், [illegible] அம்பலவாணர் ஆகியோர்

(8-ம் பக்கம் பார்க்க)

## ரயில்சேவை நிலைமை

யாழ்ப்பாணம், புதன் நேற்றுமாலை காங்கேசன் துறையில் இருந்து மெயில் ரயில் வழமைபோல் கொழும்பு நோக்கிப் புறப்பட்டதாகவும் அது அனுராதபுரத்தில்தரித்து நின்று காலை தொடர்ந்து கொழும்பு செல்லும் என்றும் ரயில்வே வட்டாரங்கள் கடந்த இரவு தெரிவித்தன.

கொழும்பில் இருந்து நேற்று பகல் புறப்பட்ட யாழ் தேவி இரவு 10 30 மணியளவில் யாழ். வந்தடையும் என எதிர்பார்க்கப்பட்டதாகவும் அவ் வட்டாரங்கள் கூறின. (உ)



# "ஆட்சிப்பொறுப்பை ஏற்பவர்கள் வல்லவராக மட்டுமல்ல நல்லவராகவும் இருக்கவேண்டும்"

## வானொலியில் எம். ஜி. ஆர். உரை

சென்னை, மே 31 ''அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் மக்கள் நலன்பேணப்படும், தொழிலாளர் வாழ்வு வளப்படுத்தப்படும். குறிப்பாக மூடை தூக்கும் தொழிலாளர், கல்லுடைத்து ஜீவனம் நடத்துவோர் வாழ்வில் ஒளியேற்றப்படும்''. என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இன்றிரவுவானொலியில் நிகழ்த்திய தமது தேர்தல் பிரசார உரையின்போதுகுறிப்பிட்டார்

### மக்களாட்சி எது?

திரு. எம். ஜி. ஆர். தமது உரையில் மேலும் கூறியதாவது.

''மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்றார். பேரறிஞர் அண்ணா. மக்களின் வாக்குரிமையைப்பெற்று மக்களுக்காக அமைவதே தூய்மையான மக்களாட்சியாகும். ஆட்சியைப் பொறுப்பை ஏற்பவர்கள் வல்லவர்களாக இருந்தால் மட்டும் போதாது நல்லவர்களாகவும் இருக்கவேண்டும், நெஞ்சுரம் கொண்டவர்களாக இருந்தால் மட்டும் போதாது அன்புள்ளம் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். மக்கள் மீது அதிகாரத்தை செலுத்துபவர்களாக இருந்தால் மட்டும் போதாது மக்களுக்கு ஆதரவளிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். உண்மையான மக்கள் பிரதிநிதிகளாக ஆட்சி நடத்த வேண்டும். ஆட்சிப் பொறுப்பை அண்ணா நடத்திய போது இருந்த நிலைமை அவர் மறைந்தபின் மறைந்தே விட்டது. களங்கம் ஆட்சி பீடத்தில் குடிகொண்டது இந்நிலை கண்டு கண்ணீர் உகுத்தேன். அதன் விளைவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றம்.

துரோகச்செயலை ஒருபோதும்

(8-ம் பக்கம் பார்க்க)

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிங்கள வருஷம் வைகாசித் திங்கள் 21-ந் திகதி (3-6-1977) வெள்ளிக்கிழமை காலை 6-45 க்கும் 8-15க்குமிடையில் நிகழும் மிதுன லக்ன சுப முகூர்த்தத்தில்

| எமது சிரேஷ்ட புத்திரன் செல்வன் | எமது சிரேஷ்ட புத்திரி செல்வி |
|---|---|
| சத்தியநாதனுக்கும் | புனிதராணிக்கும் |

நல்லூர் சிவன்கோவில் திருக்கல்யாண மண்டபத்தில் திருவருளை முன்னிட்டு நடைபெறும் திருமண வைபவத்திலும் பின்பு அத்தினம் மணமகன் இல்லத்தில் பிற்பகல் 5 மணிக்கு நிகழும் விருந்துபசாரத்திலும் குடும்ப சமேதராகச் சமுகந்தந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

தங்கள் அன்புள்ள,

க. வேலும்மயிலும் தம்பதிகள்
2, சோமசுந்தரம் அவெனியு,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

திருமதி சேனாதிராசா மனோன்மணி
''புனிதபவனம்''
கொக்குவில் கிழக்கு
கொக்குவில்.

6323

# விலை குறைப்பு

## பவர்ஸ் விவசாய தெளிகருவிகள்

### புதிய விலைகள் பின்வருமாறு

| | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| F புளொக்ஸ் 10 K | 640-00 | 615-00 |
| ஐரிஸ் 14 K | 680-00 | 655-00 |
| ஹைறோநெட் 1 கலன் | 150-00 | 145-00 |
| மைக்ரோனேசர் 35 F | 3000-00 | 2900-00 |
| மைக்ரோனேசர் 35 F&P | 3200-00 | 3100-00 |
| லிம்பிளெக்ஸ் | 55-00 | 52-50 |

1 % வியாபார மொத்த விற்பனைவரி (B. T. Tax)

புதிய விலைகள் 15-4-1977 திகதி தொடக்கம் அமுலில் உண்டு.

**A. பவர் அன் கொம்பனி லிமிட்,**
தபால் பெட்டி இல. 11, கொழும்பு.

6277

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கு இல. எம். பி. 14253
கலட்டி, யாழ்ப்பாணம். சரவணமுத்து கதிரேசு
வழக்காளி

எதிராக

141/4, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.
1. சண்முகம் கோபாலசாமியும்
2. பெண் புனிதவதியும்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் எம். பி. 14253-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1977-ம் ஆண்டு ஆனி மாதம் 29-ந் திகதி (29-6-77) புதன்கிழமை காலை10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 15,672/-ம், 30-1-74 தொடக்கம் 18-7-74 வரைக்கும் ரூபா 12,000/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை 5 வீத வட்டியும், செலவுத் தொகை ரூபா 1,036-48 சதமும். தீர்வைத்தொகையில் ரூபா 900/- வட்டியாகவும், செலவுத்தொகையில் ரூபா 400/-ம், 24-11-75ல் ரூபா 3,000/-ம், 30-8-76ல் ரூபா 5,000/ ம் கொடுபட்டது.

### ஆதன இடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை ''பிள்ளையான் வளவு'' பரப்பு நிலை இலாச்சம் 1ம் குளி 16½ம் இதில் றோட்டுப்பக்கமாக 31 அடி நீளம் 24 அடி அகலம் கொண்ட 744 சதுர அடி நிலமும், 2 அறைகள் கொண்ட கடைக்கட்டிடங்களும் அவைகளைச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு முத்துக்குமாரு பாலசிங்கத்தினுதனம், வடக்கு அப்புத்துரை கைம்பெண் மனோன்மணியினுதனம். மேற்கு புதுறோட்டு, தெற்கு முத்துக்குமாரு பாலசிங்கத்தினுதனம், இதடங்கலும் தெற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும், தூர்வை வழிவாய்க்காலுரித்தும்.

**செ. பாண்டித்துரை**
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

மல்லாகம்,
13-5-77.

6326

## தாக்கப்பட்டார்

சென்னை, மே 31

சென்னையிலுள்ள ஒரு காவல் நிலையத்தில் ஜனதா ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டது தொடர்பான நீதிவிசாரணை ஒன்று இன்று ஆரம்பமானது. மின்சக்தி அமைச்சர் பா. ராமச்சந்திரனின் புகாரை அடுத்து இவ்விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. (க)

# அறிவித்தல்

பருத்தித்துறை கடற்கரைவீதி 89ஆம் இலக்க இல்லத்தில் வசிக்கும் கந்தசாமித்துரை ஜெகதீசன் ஆகிய நான் 1977 ஜூன் மாதம் முதல் திகதியிலிருந்து எனதுபெயரை **கந்தசாமித்துரை ஜெயகுமார்** என மாற்றிக் கொண்டதை பொதுமக்களுக்கு அறியத்தருகிறேன்.

**க. ஜெயகுமார்**

31-5-1977

6328

## திருமண அழைப்பு
### ராஜா — கருணா

அளவெட்டி தெற்கு, அளவெட்டியைச் சேர்ந்த பண்டிதர் வித்துவான் சித்த வைத்திய கலாநிதி கணேசனார்- திருமதி கணேசனார் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரி கருணாம்பாள் அவர்களுக்கும், யாழ்ப்பாணம் நாவலர் வீதியைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் அவர்களின் புதல்வன் முத்துராஜன் [கணக்காளர் பகுதி, காவல்படைத் தலைமைக் காரியாலயம்] அவர்களுக்கும் 3-6-77 அன்று கீரிமலை சிவன் கோவிலில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு வருகை தரும்படியும், 5-6-77 ஞாயிற்றுக்கிழமை மாலை மணமகள் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கிறோம்.- கணேசனார் தம்பதிகள்.

6324

## 'சிவா'வுக்கு வரவேற்பு

நல்லூர்த் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகர்

**திரு. மு. சிவசிதம்பரம் அவர்கட்கு**

இடம். நந்தாவில் அம்மன் கோவிலடி, கொக்குவில்.
தலைவர்: சி. பொ. வேலாயுதபிள்ளை
காலம்: 1-6-77 புதன்கிழமை மாலை 5 மணி.

6330

## யாழ். றோட்டரிச் சங்க
### மாதர் கழகத்தாரால்

1-6-77 இன்று நடாத்தப்படவிருந்த அதிர்ஷ்ட லாபச்சீட்டு இழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் 20-6-77-ந் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அமைப்பாளர்.

6327

# விலை குறைப்பு

## அசோகா போட்டோ

மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

1-6-1977 தொடக்கம்

| அளவு | பிரதி எண்ணிக்கை | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|---|
| $12 \times 10$ குரூப் | 3 | 110-00 | 100-00 |
| $4\frac{3}{4} \times 6\frac{1}{2}$ கபினற் | 3 | 35-00 | 31-50 |
| $5\frac{1}{2} \times 3\frac{1}{2}$ போஸ்காட் | 3 | 14-00 | 12-50 |
| பாஸ்போட் $2\frac{1}{2} \times 3\frac{1}{4}$ | 3 | 7-00 | 6-25 |

6329

## சங்கானை ப. நோ. கூ. சங்கம் (வ. உ.)

# கேள்வி விளம்பரம்

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் கீழ்க்காணும் பொருட்கள் விற்பனைக்காக வைக்கப்பெற்றுள்ளது.

1. சணல் தும்புக் கயிறு 509 ருத்தல்
2. கடம்புக் கயிறு 714 ,,
3. துணிகளுக்குப் போடும் சாயவகை,
4. இரசாயன வகைகள்.
   லொறிகளிலும் வான்களிலும் கழித்த வில்லுத் தகடுகள், றீம்கள், யொக்ககாம பிறிஸ்டோன் ரயர்கள், பிற உதிரிப்பாகங்கள்.
5. விசை தெளிப்பான்கள் (அஸ்பிபோல)
6. புகையிலை உலர்த்த தேவையான பனம்பாணி - 115 கலன்
7. மின்சார உபகரணங்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இருசு டைனமோ ஆமெச்சர் 5 ரி | -1 |
| 2. | ,, சில்ட் பம் லைற்று 24 வி | -1 |
| 3. | ,, பிஸ்ரன் | -1 |
| 4. | ,, பின் கப் ஓயில் சீல் 5 ரி | -1 |
| 5. | ,, வில்லு காங்கர் | -1 |
| 6. | பென்ஸ் பழைய மொடல் லொறி-பிறேக் லைனிங் | -1 |
| 7. | ,, ,, ,, சைலன்சர் இரும்புகோஸ் | -1 |
| 8. | ,, ,, வில்லுகாங்கர் முள் | -2 |
| 9. | பிறேக் லைனிங் செற், மொறிஸ் ஒக்ஸ்போட்வான் | -1 |
| 10. | வில்லுத்தகடு சேவலெற் லொறி முன்பக்கம் | -1 |
| 11. | எக்சோஸ்ற் வால்வு, செவலெற் | -2 |
| 12. | முன் அங்கர், பென்ஸ் லொறி | -4 |

விண்ணப்பங்கள், பொதுமுகாமையர், சங்கானை ப. நோ கூ. சங்கம், சங்கானை என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலம் 5-6-77 நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளப்படும். தபாலில் இடதுபக்கம் மேல்முனையில் 'கேள்விப் பத்திர விண்ணப்பம்' என்று எழுதப்படல் வேண்டும்

**வி. கந்தசாமி**
பொதுமுகாமையர்.

28-5-77 6321

# வரி விளம்பரம்

## தேவை

ரலோ (Tallow) தேவை. சேகரித்து கொண்டுவரவும். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம் யாழ்ப்பாணம்.

6319

வெற்று சீமேன்ட் பாக்குகள் தேவை. மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 6320

## ஏலவிற்பனை

புத்தம் புதிய 'யன்மார்'(9) ஒன்பது குதிரைச் சக்தி கொண்ட டீசல் இயந்திரம் உடனடியாகவிற்பனைக்குண்டு. அரிசி ஆலைக்கும், மின்சார ஒளியேற்றவும் பாவிக்கமுடியும். ரூபா 50/- வைப்புப் பணத்துடன் தொடர்பு கொள்ள. ரூ. 5/- மீளளிக்கப்படாத பணம் செலுத்தி கேள்விப்பத்திரத்தை பெற்றவர்களே விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 10-06-1977.

**பொதுமுகாமையாளர்,**
பூ. ப. நோ. கூ. சங்கம்,
6332 பூநகரி.

## சுன்னாகம் பல. நோ. கூ. சங்கம் (வரையறுக்கப்பட்டது)
### சுன்னாகம்
# கேள்வி அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வெற்றுச் சாக்குகள், கழிவுப் பொருட்கள், கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

27-5-77-ந் திகதி கோரப்பட்ட கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டதினால் மீண்டும் மேற்படி பொருட்களுக்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள், 8-6-77-ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புவோர், காரியாலய வேலை நேரங்களில் வெற்றுச் சாக்குக்கு ரூபா 250/-மீளளிப்பு, வைப்புப் பணமாகவும் கழிவுப் பொருட்களுக்கு ரூபா 50/- மீளளிப்பு வைப்புப் பணமாகவும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் வைக்கப்படும் உறைகள், அரக்கு முத்திரை இடப்பட்டே ஒப்படைக்கப்படல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்.**

30-5-77 6331

## இன்று திறக்கப்படும்

யாழ்ப்பாணம், புதன்

தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி தலைமை காரியாலயம் இன்று வோண்டாவிலில் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

நல்லூரில் போட்டியிடும் திரு. க. இராமநாதன் இக்காரியாலயத்திற்காக கோண்டாவிலுள்ள தமது வீடொன்றை வழங்கியுள்ளார்.

இக்காரியாலயத்தில் இன்று மாலை தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்கள் கூடி, பருத்தித்துறை, காங்கேசன்துறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு தொகுதிகளுக்கான அபேட்சகர்கள் பற்றி முடிவு செய்வார்கள். (க-அ)

## திறப்புவிழா

யாழ்ப்பாணம்,புதன்

சுழிபுரத்தில் நாலு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நவீன தபால் கந்தோர் தபாலதந்தி தொடர்புகள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரால் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இது தொடர்பான வைபவம் பகல் 1-மணிக்கு ஆரம்பமாகும். (சி-அ)

# அரசு நிறுவனங்களில் ஆட்குறைப்பு

## அனுதை இல்லமாக மாற்ற முடியாது என்கிருர் பிரதமர்

புதுடில்லி, மே 31
இந்திய-சீன உறவுகள் மோசமடையவில்லை என்று பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய்தெரிவித்துள்ளார்.

கல்கத்தாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் உரையாற்றி பேசுகையில் இந்திய - சீன உறவுகள் மோசமடையவில்லை என்ருலும், நல்லுறவு ஏற்பட இடமிருக்கிறது என்று கூறினுர்.

''சீனவுடன் சுமுகமான முறையில் உறவுகளை வைத்துக்கொள்ளவே இந்தியா விரும்புகிறது. சீனுதான் முன் முயற்சிகள் எடுக்கவேண்டும்'' என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

### ஆட்குறைப்பு பற்றி பிரதமர்

கூட்டத்தின் பின்னர் பத்திரிகை நிருபர்களுக்கு பிரதமர் பேட்டியளித்தார்.

''அரச ஊழியர்களின் திறமையை வெளிக்காட்ட நாம் சந்தர்ப்பம் அளிக்கப்போகின்ருேம். இதற்கு முதல்நடவடிக்கையாக ஆட்குறைப்புத் திட்டத்தை மேற்கொள்ள அரசு விரும்புகிறது'' என்று கூறிய பிரதமர்;

''தேவைக்கு அதிகமான ஊழியர்களை வைத்துக் கொண்டு அரசு ஒரு அனுதை இல்லமாக மாறமுடியாது'' என்று விளக்கினுர்.

மேற்கு வங்காளத்தில் கலப்பு அரசாங்கம் வருமா என்று நிருபர்கள் கேட்டதற்கு; எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில், மேற்கு வங்காளத்தில் ஜனதா கட்சி வெற்றி பெறும் என்று நம்புகின்ருேம். இது நடக்காதபட்சத்தில் காப்புஅரசு அமைக்கப்படுவது பற்றி யோசிக்கலாம்என்று பிரதமர் கூறினுர்.

தமிழ்நாட்டில்

# கூட்டுச் சேர்ந்ததால் அழிவு ஏற்பட்டுவிட்டது

— வை. பி. சவான்

சென்னை, மே 31
தமிழ்நாட்டில் மாநிலக் கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்ததால்தான் காங்கிரஸ் கட்சிக்கு பெரும் அழிவுஏற்பட்டது என்று முன்னுள் மத்திய அமைச்சர் திரு. வை. பி. சவான் இங்கு நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

''காங்கிரஸ்கட்சி தனியாக நின்று போட்டியிட்டிருந்தால் தமிழ்நாட்டில் தனிப்பெரும் செல்வாக்கைப் பெற்றிருக்க முடியும். பிராந்தியக்கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்ததால், காங்கிரஸுக்கு தீங்குகள் ஏற்பட்டதுடன், சரிக்கட்டமுடியாத விளைவுகளும் உண்டாகின. இந்த நிலை இனிமேல் நீடிக்கமுடியாது'' என்று திரு. சவான் கூறினுர்.

''காமராஜர் உண்மையானவர், நேர்மையானவர். திறமைக்குப் பெயர்போனவர். அவரது தலைமையால் தமிழ்நாடு தனிப்பெரும் செல்வாக்கைப்பெற்றிருந்தது. இந்த நிலை பின்னர் மாறிவிட்டது. தமிழ் நாட்டுக்குப் பெரும் அவப்பெயர் உண்டானது.

(7ம் பக்கம் பார்க்க)

## அண்ட வெளியில் ''கொஸ்மஸ் 910''

மாஸ்கோ, மே 31
அண்டவெளி ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும பொருட்டு சோவியத்யூனியன் '' கொஸ்மஸ் - 910 '' செய்கோளொன்றினை அண்டவெளிக்கு அனுப்பி வைத்துளது.

91 நிமிடங்களுக்கு ஒரு தடவை பூமியை வலம் வரும் ''கொஸ்மஸ் 910'' பூமியிலிருந்து 506 கிலோ மீட்டர் தூரத்தில் சஞ்சரிக்கின்றது. சுழல் பாதைக் கோலம் 65.1 பாகைகளாகவுள்ளது.

''கொஸ்மஸ் - 910'' அனுப்பி வரும் தகவல்கள் ஒருங்கிணைப்பு கணிப்பு கேந்திரத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன.

''இந்தியாவில்

## வறுமையை இனித்தான் ஒழிக்க வேண்டும்!''

புதுடில்லி, மே 31
நாட்டில் வறுமையும், வேலையில்லாத்திண்டாட்டமும் நீங்கவில்லை என்று ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் உத்தரபிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினுர்.

''நாட்டில் அரசியல்நிலை மாறிவிட்டது. ஆனுலும் இந்த இரண்டு பிரச்னைகளையும் உடனடியாகத் தீர்க்க முடியவில்லை. இவற்றைத் தீர்ப்பதற்கு இனிமேல்தான் பரவலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்'' என்று கூறிய திரு. சந்திரசேகர்;

''தேர்தல் நடைபெறுவதற்கு முன் ஜனதா கட்சி அளித்த வாக்குறுதிகளை இப்பொழுது நிறைவேற்றிவருகிறது என்று தெரிவித்தார்.

''நாட்டின் சில பிரச்னைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. பொருளாதாரத் துறையில் சில புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமே சில உடனடிப் பிரச்னைகளைத் தீர்க்கமுடியும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தான்

# அரசியல் நெருக்கடி தீர மீண்டும் முயற்சி

இஸ்லாமாபாத், மே 31
பாகிஸ்தானில் அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவர மற்றுமொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சிகளுக்கும் அரசாங்க கட்சிக்குமிடையே கடந்த காலத்தில் பலசந்தர்ப்பங்களில் பேச்சுக்கள் நடைபெற்றபோதிலும் எல்லாமே தோல்வியில்தான் முடிந்தன.

(7-ம் பக்கம் பார்க்க)

மாருதி கம்பனி விவகாரம்:

## ரூ. 5000 பிணையில் செல்ல சஞ்சேய்க்கு அனுமதி

புதுடில்லி, மே. 31
மாருதி கம்பனி விவகாரம் தொடர்பாக முன்னுள் பாரத பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியின் மகன் சஞ்சேய் காந்தியை 5000 ரூபா பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது. பாரதத்தை விட்டு வெளியேறக்கூடாது என்றும் நீதிமன்றம் உத்தரவிடும்போது நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டுமென்றும் இவ்வுத்தரவில் கூறப்பட்டுள்ளது. தம்மை அவசியம் ஏற்படும்பட்சத்தில் பிணையில் செல்ல அனுமதிக்கவேண்டும் என்று திரு. சஞ்சேய் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் புதிய ஆட்சி அமைந்துள்ளபடியால் தம்மீது வஞ்சம் தீர்க்கப்படலாம் எனத் தெரிவித்திருந்தார். (உ)

## ரயில்விபத்து 46பேர் பலி

புதுடில்லி, மே 31
கௌவாட்டியில் நேற்று நிகழ்ந்த ரயில் விபத்தில் 46 பேர் கொல்லப்பட்டனர். நூறுபேர் காயமடைந்தனர்.

இவ்விபத்துக்குறித்து பிரதமர் மொரார்ஜி வருத்தம் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் ஏற்பாடுகள் பூர்த்தி

புதுடில்லி, மே 31
பதினெரு மாநிலங்களிலும் சட்டசபைத்தேர்தல் நடைபெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன என்று தேர்தல் கமிஷனர் அறிவித்துள்ளார்.

பாதுகாப்பு ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துவிட்டன என்றும்அவர் குறிப்பிட்டார்.

முன்னர்போல தேர்தல்தினத்துக்கு முதல்நாள் இரவு வாக்களிப்பு பெட்டிகள் வரமாட்டா. தேர்தல் நடைபெறும் தினம் தான் வாக்குச் சீட்டுப்பெட்டிகள் கொண்டுவரப்படும். இந்தப்புதிய ஏற்பாடுகள் பாதுகாப்புகளை முன்னிட்டே செய்யப்படுகின்றன என்று தேர்தல் கமிஷனர் தெரிவித்துள்ளார்.

## இமயமலைக்கு குறுக்கே


புதுடில்லி, மே 31
இமயமலைக்குக் குறுக்கே தகவல் தொடர்புகள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன. இந்தியாவும் சோவியத் யூனியனும் இதற்கான திட்டத்தை வரைந்துள்ளன.

1980-ம் ஆண்டு ஏப்ரல் மாதம்முதல் இத்திட்டம் அமுலுக்குவரும் என்று அறிவிக்கப்பட்டது.

முதல் ஆண்டு நிறைவையொட்டி அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவருக்கும் உளம் நிறைந்த நன்றி கூறுகிறது

# குமாரன் ரூறிஸ்ட் இன்

(எட்வர்ட் தங்கவடிவேல் ராஜகுமார்)




யாழ். நகரில் சகல வசதிகளுடன்

- தங்கும் அறை வசதிகள்
- 24 மணி நேரசேவை
- குறைந்த செலவில் விசேட உணவு வகைகள்
- நிறைந்த உபசரிப்பு! இன்றே விஜயம் செய்யுங்கள்

குமாரன் ரூறிஸ்ட் இன் 67, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,

6325

**மணிவாக்கு**

நம்முடைய குற்றங்கள் இவைகள் என்று நமக்குத் தெரிவித்து அவைகளை நீக்கி நடக்கும் நெறியை நமக்குப் போதிக்கின்றவர்களே உத்தம சிநேகிதர்கள்.

— ஆறுமுகநாவலர்.

ஈழநாடு
THE EELANAADU

# புகையிரத சேவைகள்

புகையிரதப்பகுதி ஊழியர்கள் சட்டப்படி வேலைசெய்யும் இயக்கத்தை மேற்கொண்டதின் காரணமாக ரயில்வண்டிகள் நேர அட்டவணைப்படி ஓடமுடியாமல்போனதுடன், தூர இடங்களுக்கான சேவைகள் முற்றாகவே தடைப்பட்டுள்ளன.

நமது நாட்டில் பெருந்தொகையான மக்கள் தம் அவசியப் பிரயாணங்களுக்கு இந்த ரயில் வண்டிகளையே நம்பியிருக்கிறார்கள். தூர இடங்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் ரயில்கள் மூலமே எடுத்துச்செல்லப்படுகின்றன. நகரப்புறங்களிலுள்ள அரசாங்க அலுவலகங்கள், கூட்டுத்தாபனங்கள், மற்றும் பிரதான தொழில்நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்கள் எல்லாம் அன்றாடம் இந்த ரயில் வண்டிகளை நம்பியே தூர இடங்களிலிருந்து பிரயாணம் செய்கிறார்கள். செய்கிறார்கள்.

இந்த நிலைமையில் ரயில் சேவைகள் பல நாட்களுக்கு ஸ்தம்பித்துப் போகுமானால் அரசுக்கு ஏற்படும் நஷ்டம் ஒருபுறமிருக்க ஏழை பொது மக்களே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக்கொள்ளும் சமூக விரோதிகள் செயற்கைத் தட்டுப்பாடுகளை ஏற்படுத்தி சாதாரண பொருட்களின் விலைகளையும் ஆனைவிலை குதிரைவிலைக்கு ஏற்றிவிடுகிறார்கள்.

ரயில்வே ஊழியரின் சட்டப்படி வேலைசெய்யும் இயக்கமே இவ்வளவு பாதிப்புக்களை ஏற்படுத்துமானால் அவர்கள் முழு வேலைநிறுத்தத்தை மேற்கொண்டால் எப்படியிருக்கும் என்று நினைத்துப்பார்க்கமுடியவில்லை.

ரயில்சேவை ஊழியர்களின் கோரிக்கைகளில் நியாயம் இருக்கிறதா, இல்லையா என்பது அரசுக்கும் அவர்களுக்குமுள்ள பிரச்னை. அரசுக்கு சங்கடம் ஏற்படுத்துவதற்காகவே சில சக்திகள் ரயில்வே ஊழியர்களை தவறான வழியில் தூண்டிவிட்டிருக்கிறார்கள் என்று போக்குவரத்து அமைச்சர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். இதில் எல்லாம் உண்மை எவ்வளவு தூரம் இருக்கின்றது என்பதல்ல எமது வாதம்.

ரயில்சேவை ஸ்தம்பித்ததால் பொதுமக்கள் குறிப்பாக சாதாரண மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றார்கள் என்பதே எமது கவலை.

எனவே இந்த நிலைமையை எவ்வளவு சீக்கிரம் மாற்றி அமைக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாக அதனைச் சந்திக்க முயல்வதே புத்திசாலித்தனமாகும்.

நிலைமையை மேலும் வளரவிட்டால் அது கௌரவப்பிரச்னையாக மாறி மேலும் பல சிக்கல்கள் ஏற்பட்டுவிடக்கூடும். பொதுத் தேர்தல் அண்மித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நாட்டுமக்களுக்கான அத்தியாவசிய சேவைகள் ஒன்றில் அதிருப்தியும், விரக்தியும் வளர அனுமதிப்பது சம்பந்தப்பட்ட அனைவருக்குமே நன்மைபயக்க மாட்டாது.

## இடி அமீனின் கெடுபிடி

பிரிட்டிஷ்காரர்களின் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பதில் உகண்டா அதிபர் இடி அமீனுக்கு ஒரு அலாதிப் பிரியம்.

பிரிட்டிஷ் பத்திரிகையாளர் ஒருவர் உகண்டாவில் அரசியல் கெடுபிடிகளுக்கு உள்ளானபோது அவர் தொடர்பாகப் பேச்சுநடத்த வந்த பிரிட்டிஷ் மகாராணியின் தூதுவரைத் தம் முன் மண்டியிட்டு மரியாதை செலுத்தினால்தான் பேச்சு நடத்துவேன் என்று 'அடம்' பிடித்தவர் இடி அமீன்.

உகண்டாவில் இவர் நடத்தும் 'தர்பார்' குறித்து வெளிநாடுகளில் விமர்சனம் செய்யும் அவதானிகள் கறுப்பு இன 'ஹிட்லர்' என்று இவரை வர்ணிக்கிறார்கள்.

கறுப்பு இன மக்களுக்குக் கடந்த காலங்களில் வெள்ளை இனத்தவர்களால் நேர்ந்த கொடுமைகள்–அவமானங்களுக்குப் பழிவாங்கும் முறையில் அவர் இப்பொழுது நடந்துகொள்வதாகவும் கூறப்படுகின்றது.

இந்த நிலைமையில் பிரிட்டனில் நடைபெறவிருக்கும் பொதுநல நாடுகள் மகாநாட்டுக்கு இடி அமீன் வருவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது. அவர் வருவதைப் பிரிட்டிஷ் அரசு தடுத்து நிறுத்துமானால் பொதுநல அமைப்பில் புதிய சிக்கல்கள் தோன்றக் கூடுமென்று கருதப்படுகின்றது. இதனால் இடி அமீனை தானாகவே வராமற்செய்வதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

இடி அமீன் இதற்கெல்லாம் அசைந்துகொடுப்பதாகத் தெரியவில்லை. பொதுநல நாடுகள் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக அவர் தமது குடும்பத்தோடு லண்டனில் போய் இறங்கப்போவதாக அறிவித்துள்ளார்.

அவரையும், அவர் குடும்பத்தினரையும் பிரிட்டிஷ் அரசும் மக்களும் எப்படி வரவேற்கப் போகின்றார்கள் என்பதை இனிக்காத்திருந்துதான் பார்க்கவேண்டும். சுவாரஷ்யமாகவும் இருக்கும்.

## நலிவுற்ற ஆலைகள்

புதுடில்லி, மே 31

நாட்டில், நலிவுற்றதுணி ஆலைகளை அரசாங்கம் இனி மேல் பொறுப்பேற்கமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதிரியான ஆலைகளை விரும்பினால் மாநில அரசுகள் பொறுப்பேற்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

# தமிழரின்பிரச்னையைத்தீர்க்க எந்தத்திட்டமும் கிடையாது!

## சோ. மு. கூட்டணிவிஞ்ஞாபனம் குறித்து 'தர்மர்' கருத்து

யாழ்ப்பாணம், புதன்

''தமிழினத்தை சுய நிர்ணய உரிமை கொண்ட தமிழ்தேசிய இனம் என ஏற்று அந்த அடிப்படையில் தான் தமிழ் இனத்தின் பிரச்னையை தீர்க்கவேண்டும் என்ற கருத்து சோஷலிச முற்போக்குக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெருதது பெரும் ஆச்சரியமும் ஏமாற்றமாகும்.''

உடுவில் முன்னாள் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், சோஷலிச முற்போக்குகூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் பற்றி கருத்துத்தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ''1944ம் ஆண்டு, மேற்கண்ட கருத்தை கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானமாக ஏற்றுக்கொண்டது. சோஷலிச முற்போக்குக் கூட்டணியில் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு அங்கமாக இருந்தும் இக்கருத்து தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெருதது ஏமாற்றமளிக்கிறது.

''சோஷலிச முற்போக்குகூட்டணியின் 12 அம்சத்திட்டத்தில் கூறியிருக்கின்ற பொருளாதார குறிக்கோளுக்கும், தமிழரசுக் கட்சி அரசியல் நிர்ணய சபைக்கு சமர்ப்பித்த மாதிரி அரசியல் அமைப்புத் திட்டத்தில் கூறியிருக்கின்ற குறிக்கோளுக்கும். தமிழர் விடுதலை கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டிருப்பவற்றுக்கும், வித்தியாசம் எதுவும் இல்லை.

''அயல் நாட்டு உள் நாட்டு விவகாரங்களில் கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளவற்றிற்கும், சோஷலிச முற்போக்குக் கூட்டணியின் 12 அம்சத்திட்டத்தில் உள்ளவற்றிற்கும் அடிப்படை வித்தியாசமில்லை.

''இனப்பிரச்னையை தீர்ப்பதற்காக அவர்களின் 12 அம்சத்திட்டத்தில் எந்தவிதமான திட்டமும் வழிவகுக்கப்படவில்லை. இதைப் போலவே தான் சுதந்திரக் கட்சியினரும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் கூறிவருகின்றனர்.

''இவைகளுக்கிடையில் வித்தியாசமின்றி, பாகுபாடின்றி, சமத்துவமாக நடத்துவோம் என்றுதான் கூறப்பட்டுள்ளது. இதைத்தான் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக்கட்சியும் சொல்லி வந்தது'' என்று திரு. வி. தர்மலிங்கம் கருத்து வெளியிட்டார். (க)

# இலங்கைக்கு பௌத்தம் வந்தநாள் இன்று

**— நிலமே பி. ரணசிங்ஹ —**

'போஸன்' என்பது ஆனி மாதத்தைக் குறிக்கும். பௌத்தசமயம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட நாளே போஸன் தினமாகும்.

மௌரிய வம்சத்தைச் சேர்ந்தசந்திரகுப்தமன்னன் பாடலிபுத்திரப்பகுதியில் இருபத்து நான்குஆண்டுகள் அரசுபுரியும்போது இவருடைய மனைவிக்கு சுசிம, அசோகன், திஸ்ஸ என்னும் மூன்று குழந்தைகள் பிறந்தனர். சந்திரகுப்த மன்னனுக்கு இன்னும பதினொரு மனைவிகள் இருந்தார்கள். அவர்களுக்கு நூற்றொரு குழந்தைகள் இருந்தார்கள். தந்தை சந்திரகுப்தமன்னனின் மரணத்திற்குப்பின் அரசைக் கைப்பற்ற அசோகன் தொண்ணூற்றொன்பது சகோதரர்களைக்கொலைசெய்தான். நான்கு வருடகாலமாகச் சகோதரர்களுடன் யுத்தம்செய்த அசோகனை சாம்ராட் அசோகன் என அழைத்தனர்.

தன்னுடைய ஆதிக்கத்தை உலகம் எங்கும் பரப்புவதற்கு 'சக்கரவர்த்தி' என்னும் பட்டத்தைப்பெறப் பலதடவைகள் யுத்தங்களில் ஈடுபட்ட அசோகன் கடைசியில் கலிங்க யுத்தம் நடைபெற்றபோது இந்த யுத்தத்தில் முப்பது லட்சம் மக்கள் இறந்தனர். இதனால் அசோகன் ஒருபோதும் அனுபவிக்காத சோகக்கடலில் மூழ்கினான். இறந்தவர்களைப் பற்றிய இரக்கம் அவன் மனதில் எற்பட்டது. இதன்பின் பௌத்த சமயம் தழுவிய அசோகன் 'தர்மஅசோகன்' என அழைக்கப்பெற்றான்.

பிக்குகளை அரண்மனைக்கு அழைத்துத் தன் சிம்மாசனத்தில் அமரவைத்துத் தர்மத்தைப் போதித்தான்.

மன்னன் அசோகன் தான் எதிர்பார்த்த சாந்தியைப் பௌத்ததர்மத்தின் மூலமாகக் கண்டான். அதன்பின் இந்தியசமுதாயத்தில் பலவிருத்திகள் உண்டாயின. மன்னனின் மாளிகைபிக்குகளுக்குத் திறந்த நிழல் ஆகியது.

மனிதர்களுக்கு மட்டும் கருணைகாட்டுவது மன்னன் அசோகனின் கொள்கையாக இருக்கவில்லை. மிருகங்களுக்கும் வைத்திய நிலையங்கள் திறந்துவைத்தான். பூஜைகளுக்குப்பதிலாக யாகங்கள் நடைபெற்றுவருவதைத் தடுத்துநிறுத்தினான். யாகங்களுக்குப் பிராணிகள் வருத்தப்படுவதை அசோகன் கண்டித்தான்.

அசோகனுக்கும் மனைவி தேவிக்கும் மகிந்தா என்னும் ஆண்குழந்தையும், சங்கமித்து என்னும் பெண்குழந்தையும் பிறந்தன. அவர்கள் இருவரையும் அசோகன் தன்வழியே நடாத்தி பௌத்தசமயத்தைப் பரப்புவதற்கு ஊக்குவித்தான்.

பௌத்தசமயத்தை ஒன்பது ராஜ்யங்களில் பரப்புதற்கு ஒன்பது தூதர்களை அனுப்பிவைத்தான்.

இலங்கைக்குப் புத்தசமயத்தைக்கொண்டுவந்தது மகிந்த பிக்கு ஆவார். புத்தர் பரிநிர்வாணம் அடைந்து 236 ஆண்களுக்குப்பின் இன்றுபோல் ஒரு தினத்தில் மகிந்தா இலங்கைக்கு வந்து மிகுந்தலைக் காடொன்றில் வேட்டையாடிக்கொண்டிருந்த தேவநம்பிய தீசனைக்கண்டு தர்மத்தைப் போதித்தான். அன்றுதொடக்கம் தேவநம்பியதீசனும் புத்த சமயத்தைத் தழுவிக்கொண்டார்.

இப்புதிய தர்மத்தைப்பற்றித் தகவல் கிடைத்த மக்கள் பெரும்திரளாக அனுரதபுரத்தை வந்தடைந்தனர். அதைத்தொடர்ந்து மகிந்தாவின் உபதேசங்களுடன் தேவநம்பியதீசன் அனுரதபுரத்தில் எட்டுப்பகுதிகளைப் புதிய இடமாக்கினார். அவை ஆயிரங்கால் மண்டபம, இசுருமுனி விகாரை, ருவான்வலிடகோபா, மிருசவட்டிய. ஸ்ரீ மகாபோதி அரசமரம், அபயகிரி, தூபாராமய, மிகிந்தலை ஆகியனவாகும்.

மகிந்தா இலங்கைக்கு வந்த சிறிதுகாலத்தில் இலங்கைமுழுவதும் புத்தசமயம் பரவியது. விகாரைகள் கட்டப்பட்டன. அத்துடன் பௌத்த கல்வி, கலாச்சாரம் பரவியதனால் சமுதாயத்தில் பல துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. அதன்பின் இலங்கையின் பிரதானசமயம் புத்தசமயமாகியது.

அச்சமயத்தில் இலங்கையின் ஒருபகுதியை அரசுபுரிந்த எல்லாளமன்னனும் புத்தசமயத்தைக் கௌரவித்தான்.

தேவநம்பியதீசன் காலமாகும்போது புத்த சமயம் இலங்கை முழுவதும் பரவியது மட்டுமல்லாமல் எல்லா ஊர்களிலும் சமயக் கல்வி நிலையங்களும் போதனை மடங்களும் காணப்பட்டன.

அதைத் தொடர்ந்து நிலங்களையும் வயல்களையும் மக்கள் சமய அபிவிருத்திக்காக அன்பளிப்பாகக் கொடுத்தனர்.

இதன் பின்னர் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. இலங்கையரும் இந்தியரும் அங்கு செல்லவும் இங்குவரவும் தொடங்கினர்.

அது மட்டுமின்றி இலங்கையில் கட்டிடக்கலையும் முன்னேற்றம் அடைந்தது.

புத்த கொள்கையை மேற்கொண்ட அசோக மா மன்னன் இலங்கைக்கு மட்டுமின்றி உலகத்தில் பல பகுதிகளுக்கும் பௌத்தத்தைத் நன் கொடையாக வழங்கினான்.

## 'உலகிற்கு உணர்த்தும் தேர்தல்'

நெல்லியடி, செவ்.

'தமிழர் விடுதலை இயக்கத்தின்கீழ் கட்டுப்பட்டு இருப்பதனாலேயே, இயக்கத்தின்கட்டளைக்கு இணங்க இத்தேர்தலில் போட்டியிடுகிறேன்'

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின்பருத்தித்துறைத் தொகுதி வேட்பாளர் திரு. கே. துரைரத்தினம் பருத்தித்துறை நாலாம் குறுக்குதெருவில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும்போது கூறினார்.

திரு. அ. மரிசலின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் திரு. துரைரத்தினம் தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது:

'விடுதலை என்பது தனிமனிதன் ஒருவனுக்கு மட்டும் சொந்தமல்ல. ஓர் இனத்தில் அங்கம் வகிக்கும் அனைவருக்குமே சொந்தமாகும். இன விடுதலைப்போருக்கு அத்திபாரமாக இத்தேர்தல் விளங்கப் போகிறது. ஆகவே இத்தேர்தலை சர்வஜன வாக்கெடுப்பாக நாம் அனைவரும் கரு•வேண்டும்'.

திருவாளர்கள் எஸ். கே. மகேந்திரன், பொன், மதிமுகராசா, ஆர். டி. இரத்தினசிங்கம் ஆகியோரும் பேசினர். (அ)

## 14 கோடி ரூபா பெறுமதி மரம்

கொழும்பு, செவ்

கடந்த மூன்று வருடங்களில். இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுஸ்தாபனம் 14 கோடி 40 லட்சம் ரூபா பெறுமதியான மரங்களை வன பரிபாலன இலாகாவிடமிருந்து வாங்கியுள்ளது.

# "தேர்தலில் நாம் போட்டியிட சந்தர்ப்ப சூழ்நிலையே காரணம்!"

## காங்கிரஸ் ஆதரவாளர் கூட்டத்தில் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

"அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் மிகப் பலமான அத்திபாரத்தைப் போட்டுத் தமிழ்க் காங்கிரஸைக் கட்டியெழுப்பினார். அதனால் அத்திபாரத்தில் ஆட்டம் காணவில்லை. கூரையில்தான் சில பகுதிகள் தேர்தல் காற்றுக்குப் பறந்துவிட்டன. உணர்ச்சியுள்ள காங்கிரஸ் வாலிபர்கள் கூரையைக் காங்கிரீட்டினால் கட்டுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு."

சாவகச்சேரி சரஸ்வதி பூங்காவில் நடந்த தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய காங்கிரஸ் ஸ்தாபக உறுப்பினர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்கள் சார்பில் போட்டியிடும் அபேட்சகர்களான திருவாளர்கள் குமார் பொன்னம்பலம், வி. குமாரசாமி, க. இராமநாதன், சி. முதலியார், ஜே. எஸ். சுந்தரம், ரி. பரமானந்தராசா ஆகியோர் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டனர்.

திரு. ஆர். என். சிவப்பிரகாசம் மேலும் கூறியதாவது:

"சரித்திரம் மறுபடியும் எழுதப்படுகிறது. புதிய பாதையில் மறைந்த தலைவர் ஜி. ஜி.யின் இலட்சியத்துடன் பயணத்தை ஆரம்பிக்க லட்சக்கணக்கான வாலிபர்கள் காத்திருக்கின்றனர். அவர் லட்சியமான தமிழ் ஈழத்தைப் பெறுவதுதான் அவருக்கு நாம் செய்யும் கைமாறுகும்.

### பலமான அத்திபாரம்

"அமரர் ஜி. ஜி.யின் பலமான அத்திபாரத்தில் உருவான தமிழ்க்காங்கிரஸ் எந்தச் சூழ்ச்சியினாலும் அழிக்க முடியாது. 1947ம் ஆண்டு முதல் கால் நூற்றாண்டு காலம் பலர் காங்கிரஸை விட்டு வெளியேறிச் சென்றாலும் காங்கிரஸ் எவ்வித மாற்றமும் இல்லாது இருந்தபடியே இருக்கிறது.

"கடந்த 5 வருட காலத்திற்கு மேலாகக் காங்கிரஸ் சரியான முறையில் இயங்காதபடியால்தான் நாம் இந்த நிலையில் இருக்கிறோம். அதனை இயங்கச் செய்வதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டியது அவசியம்.

"தமிழர் விடுதலைக் கூட்டணி நியமனக் குழுவினரைச் சந்திப்பதற்காகத் தமிழ்க் காங்கிரஸ் கமிட்டி ஒரு உபகுழுவை நியமித்தது. அந்த உப குழுவுக்கு நான் தலைமை தாங்கினேன். நியமனக் குழு உறுப்பினர்களைச் சந்தித்து எங்கள் கோரிக்கையை எடுத்துக் கூறினேன்.

### சந்திப்பு விபரம்

"தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் செயலாளர் திரு. ரி. சிவசிதம்பரம் வாலிப முன்னணித் தலைவர் திரு குமார் பொன்னம்பலம் ஆகியோருக்குத் தொகுதிகள் ஒதுக்கப்படவேண்டும் என வலியுறுத்தினோம். இதனை நியமனக்குழு உறுப்பினர்களான திரு. எஸ். கதிரவேற்பிள்ளையும், திரு. அ. அமிர்தலிங்கமும் ஏற்றுக்கொண்டனர். பின்னர் உப குழு உறுப்பினர்களான திரு ஆர். பரமேஸ்வரன், திரு வி. கணசபாலன் ஆகியோரும் நியமனக்குழு உறுப்பினரான திரு. ரி. சி. சிதம்பரத்தை வவுனியாவில் சந்தித்து எங்கள் கோரிக்கையை வலியுறுத்தினார்கள். பின்னர் கொழும்பில் திரு. எம். சிவசிதம்பரத்தை சந்தித்துவலியுறுத்தினார்கள். திரு. குமார் பொன்னம்பலத்திற்கு யாழ்ப்பாணத் தொகுதியைக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையைப் பரிசீலனை செய்வதாக உறுதியளித்தனர். பின்னர் திரு. குமார் பொன்னம்பலத்தை நேரில் அறிந்து வட்டுக்கோட்டையில் போட்டியிடுமாறு கூறினார்கள். தாங்கள் முழு ஆதரவு கொடுப்பதாகவும் உறுதியளித்தார்கள். திரு. குமார் பொன்னம்பலமும் வட்டுக்கோட்டையில் போட்டியிடச் சம்மதித்தார். அன்றிரவு என்ன நாடகம் நடந்ததோ தெரியவில்லை. மறுநாட் காலை வட்டுக்கோட்டைக்கு நியமனக்குழு வேறொருவரை நியமித்திருந்தது. இப்படியான செய்கைகளை எந்தத் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளரும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

### அறிக்கை புறக்கணிப்பு

"தமிழ்க் காங்கிரஸ் கமிட்டியினால் நியமிக்கப்பட்ட உப குழுவின் அறிக்கை புறக்கணிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் நம் ஆதரவாளர்கள் போட்டியிடவேண்டிய சூழ்நிலைக்கும் சந்தர்ப்பத்திற்கும் தள்ளப்பட்டுள்ளார்கள். இதற்கு முழுப் பொறுப்பையும் தமிழ்க் காங்கிரஸ் தலைமைப்பீடமே ஏற்கவேண்டும்.

### சந்தர்ப்பமே காரணம்

'சந்தர்ப்பசூழ்நிலையினாலேயே நாம் தேர்தலில் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டுவிட்டோம் என்பதை தமிழ்பேசும் மக்களுக்குத் தெரிவிக்கவேண்டியது நம் கடமையாகும்.

'இத்தேர்தலில் போட்டியிடுவது; அதன்மூலம் ஜி. ஜியின் லட்சியங்களை, கொள்கைகளைப் பரப்புவது ஜி. ஜிக்கு நாம் எழுப்பும் ஞாபகச்சின்னமாகும்.

### ஜி. ஜி.யின் உரைகள்

ஐக்கியநாடுகள்சபை, சட்டசபை, ஆட்சிமன்றம் ஆகியவற்றில், ஜி. ஜி. நிகழ்த்திய உரைகளை நூல்வடிவில் தொகுத்து வெளியிடவேண்டும். மாவோ சிந்தனைபோன்று நாம் ஜி, ஜி. யின் சிந்தனைகளை வெளியிடவேண்டும்.

### குமார் பேச்சு

யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும் தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணித் தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது: '70-ம்ஆண்டு தேர்தலில் நான் போட்டியிடவிருந்தேன். அன்றுள்ள சூழ்நிலையில் அது சாத்தியமாகவில்லை. பருத்தித்துறைத்தொகுதியிலேயே நான் போட்டியிட விரும்பினேன். ஆனால் யாழ்ப்பாணத்தொகுதி மக்கள் என்னை யாழ்ப்பாணத்தில் போட்டியிடுமாறு விடுத்த அன்புக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டேன்.

'நான் தமிழ்க்காங்கிரஸிலிருந்து என்றும் வெளியேற மாட்டேன். தமிழ்க் காங்கிரஸைக் கட்டி எழுப்பி, ஒரு விடுதலைஇயக்கமாக எதிர்காலத்தில் வழிநடத்துவேன்'.

திருவாளர்கள் வி. குமாரசுவாமி, க. இராமநாதன், ஜே. எஸ். சுந்தரம், சி. முதலியார், ரி. பரமானந்தராசா ஆகியோரும் பேசினார்கள், (க)

## வேலரும் மயிலரும்



வேலர்: எங்க வேட்பாளர்கள் கடவுளுக்கும் விசுவாசம் இல்லை, மனிதனுக்கும் விசுவாசமில்லை.

மயிலர்: ஏன்?

வேலர்: பிரச்சாரகாலத்தில் கடவுளை மறந்து மனிதனைக் கும்பிடுவார்கள்; வோட் எண்ணிறநேரம் மனிதனை மறந்து கடவுளைக் கும்பிடுவார்கள்.

சுந்தர்

## தபால்விநியோகம் தாமதமாம்

கிளிநொச்சி, செவ்

கிளிநொச்சியை அடுத்துள்ள ஸ்கந்தபுரம், அக்கராயன்குளம் வன்னேரிக்குளம் போன்ற இடங்களுக்கு தபால்கள் தாமதமாகவே கிடைக்கின்றனவாம்.

எனவே ஒரு பிரத்தியேக வாகனம்மூலமாவது தபால்கள் நேரத்திற்கு கிடைக்க ஒழுங்கு செய்துதரும்படி பொதுமக்கள் தபால் தந்தி பகுதி மேலதிகாரிகளை கேட்டுள்ளனர். (ஈ)

## எழுச்சிமாநாடு

கிளிநொச்சி, செவ்

சாவகச்சேரி தமிழ் இளைஞர் பேரவை 4-ம், 5-ம் திகதிகளில் சாவகச்சேரியில் நடத்தும் எழுச்சி மாநாட்டிற்கு கிளிநொச்சித் தொகுதியிலிருந்து ஏராளமான இளைஞர்கள்கலந்து கொள்வார்கள்.

௫00க்கு மேற்பட்ட இளைஞர்கள் சைக்கிள் மூலமாக திரு. வீ. ஆனந்தசங்கரி தலைமையில் கலந்துகொள்ள இருக்கின்றனர். இயக்கச்சி, பளை, பூநகரி, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி, விஸ்வமடு, பரந்தன் ஆகிய இடங்களிலிருந்தும் இளைஞர்கள் கலந்து கொள்கின்றனர்.

## "தனி நாடுகாணும்வரை போராடுவோம்" —ஆனந்தசங்கரி

கிளிநொச்சி, செவ்

"இலங்கையில் வாழ்கின்ற தமிழன் சுயநிர்ணய உரிமை அற்றவனாக, பிரதேசம், மதம் போன்ற பாரம்பரியங்கள் இல்லாதவனாக கடந்த கால் நூற்றாண்டுகளாக ஒதுக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட நிலைகண்டே இன்று "தமிழ் ஈழம்" காணும் இலட்சியப்பாதையில் தமிழன் ஒன்று திரண்டு உதயசூரியன் கொடியின்கீழ் போராடத்தயாராகிக் கொண்டிருக்கிறான்.

இவ்வாறு புலோப்பளையில் நடைபெற்ற தமிழர்விடுதலைக் கூட்டணி கருத்தரங்கிலும் செலவா அஞ்சலிக் கூட்டத்திலும் கலந்துகொண்டு பேசிய கிளிநொச்சி முன்னாள் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரி கூறினார்.

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது "உலகில் முதல் முதலில் தோன்றிய தமிழ் இனம் இன்று உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறது. உலகில் உள்ள 33 நாடுகளில் தமிழர்கள் அவல நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

இதில் இலங்கையில் வாழும் 30லட்சம் தமிழர்களும் இரண்டாம்தரப்பிரஜைகளாக ஒதுக்கப்பட்டு இழிநிலையில் வாழ்கிறார்கள்,

"பதினையாயிரம் ஆண்டு வரலாற்றைக் கொண்ட தமிழ் இனம் இரண்டாயிரம் ஆண்டு வரலாற்றை உடைசய சிங்கள இனத்திற்கு அடிபணிந்து வாழ தமிழ் இனம் அடிமை இனம் அல்ல.

பா. வை. ஜெயபாலன், இ. கிருஷ்ணராசா, மற்றும் மகளிர் பேரவை உறுப்பினர் இளைஞர்பேரவையைச் சேர்ந்த இந்திரன், அம்பன், ஆகியோர் உட்படபலர் பேசினர். (ஈ)

## கிளிநொச்சியில் வேட்பாளர்

கிளிநொச்சி, செவ்வாய்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கிளிநொச்சித் தொகுதியில் எட்டுப் பேர்களுக்கு மேல் போட்டியிடுவார்கள் எனத் தெரிகிறது.

(ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் திரு.சி. குமாரசூரியர். திரு. கனகசூரியர் (யூ என்,பி), திரு வீ. ஆனந்தசங்கரி (கூட்டணி) சுயாட்சிக்கழகம் திரு. பாலசிங்கம், விவசாயிகள்சம்மேளனம் திரு. பி. கணேசபிள்ளை, ஈழத்தமிழர்முன்னணி என். எஸ். லட்சுமணன், சமசமாஜக்கட்சி திரு. பாலேந்திரா மற்றும்சுயேச்சைவேட்பாளர் திரு. எக்ஸ். ஆர். பிரான்சிஸ், திரு. அன்ரன் பொன்னம்பலம் ராஜன், திரு. ச. த. முருகேசு ஆகியோர் போட்டியிடவிருக்கின்றனர். (ஈ)

## இராசதுரை — உதயசூரியன் காசிஆனந்தன் — வீடு

யாழ்ப்பாணம், புதன்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு அபேட்சகர்களான திரு செ. இராசதுரை, திரு. காசி ஆனந்தனுக்குமுறையே உதயசூரியனும் வீடும் வழங்கப்படும்.

கூட்டணி இலங்கையின் அரசியல் கட்சியாக பதியப்பட்டு விட்டதால் உதயசூரியன் சின்னம் திரு. செ இராசதுரைக்கும், தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னம் திரு. காசி ஆனந்தனுக்கும் வழங்கப்படும்.

திரு. காசி ஆனந்தன் தமிழரசுக் கட்சி சின்னத்தைப் பெறுவதற்குதமிழரசு கட்சிபொதுச் செயலாளர் திரு. கதிரவேற்பிள்ளையிடம் உத்தியோகபூர்வமாக கடிதம் ஒன்றைக் கையளித்துள்ளார். (கி)

## கரணவாய்க்கு யானைவந்தது

கரவெட்டி, செவ்வாய்

கரணவாய் தெற்கு கலட்டிப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற 3-ம் திருவிழாவின் போது யானைஒன்று கொண்டு வரப்பட்டது அந்தயானை மீது கலட்டிப் பிள்ளையார் வீதி வலம் வந்தார். (அ)

## கல்விச்சுற்றுலா

வேலணை, செவ்வாய்

வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மாணவ மாணவிகள் சென்றவாரம் கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுயாழ்ப்பாணத்தில் சரித்திர முக்கியத்துவம் பெற்ற இடங்களையும், தொழில் நிலையங்களையும் பார்வையிட்டனர். பாடசாலை உபஅதிபர் திரு. வை. இராமகிருஷ்ணஐயர் தலைமையில் சென்ற கல்விச்சுற்றுலாவிற்கான ஏற்பாடுகளை கல்லூரி அதிபர் திரு. சுப்பிரமணியம் செய்திருந்தார். (அ)

## வேலரும் மயிலரும்

நேற்றைய 'ஈழநாடு' இதழில் 'வேலரும் மயிலரும்' பகுதியில் 'தண்ணீர் மூண்டுபிழை பொறுக்கும் தமிழன் மூன்று வேட்பாளரையும் பொறுப்பான்' என்பதற்குப் பதிலாக 'முப்பது வேட்பாளரையும் பொறுப்பான்' என்றிருக்க வேண்டும்.

மட்டுநகர், செவ்.

ஆயித்தியமலை விவசாய சேவைநிலையத்தின் இலங்கை வங்கிக்கிளையொன்றை கிராமிய தாபன உற்பத்திச் சட்ட அத்தியட்சகர் திரு. ஐ. கே. வீரவர்த்தன ஆரம்பித்து வைத்தார். இவ்வைபவம் பிரிவு விவசாயப் போதனாசிரியரும், நிலையத்தலைவருமான திரு. ஆர். சீனித்தம்பி தலைமையில் நடைபெற்றது.

# "தமிழின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்"

## கனகசுந்தரம்பிள்ளை திரைநீக்கம் வைபவத்தில் கைலாசபதி

யாழ்ப்பாணம், புதன்

"இருபதாம் நூற்றாண்டிலே பல துறைகளிலும் தமிழ் மொழி, இலக்கியம் ஆராய்ச்சி என்பன பெருவளர்ச்சிபெற்று வருகின்றன. இவ்வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்த பெரியார்கள் ஈழத்திலும் இந்தியாவிலும் சென்ற நூற்றாண்டின் பின்பகுதியிலும் இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்து முன்னோடிப் பணிகள் பல புரிந்தனர் தமிழின் தற்கால மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்கள் இவர்கள். இத்தகைய பெரியவர்களில் ஒருவரே திருகோணமலை தி. சு. கனகசுந்தரம். பல்லாண்டு தமிழகத்திலே வதிந்து தமிழியல் ஆராய்ச்சிக்கு உதவியவர் கனகசுந்தரம்பிள்ளை"

இவ்வாறு யாழ் வளாக நூல் நிலையத்தில் பேராசிரியர் தி. த. கனகசுந்தரம்பிள்ளையின் உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்த வளாகத் தலைவர் பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "ஈழத்து தமிழிலக்கிய ஆராய்ச்சியைச் சிறப்பாக நடத்துவதற்குரிய நிலையமாக யாழ்ப்பாண வளாகம் விளங்கவேண்டும் என்பது எமது திட்டமாகும். இதனை மனங்கொண்டே நமது நூலகம் உருவாக்கப்பட்டு வருகிறது. கனகசுந்தரம்பிள்ளையவர்களின் உருவப்படம் நூலகத்திலே திரை நீக்கஞ் செய்யப்படுவது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதனை அன்பளிப்புச் செய்த பிள்ளையவர்களின் குமாரர் திரு. இராஜமார்த்தாண்டனுக்கு எமது மனமுவந்த நன்றி உரித்தாகுக" என்றார்.

வடமொழி விரிவுரையாளர் வி. சிவசாமி பேசுகையில், "முழுநேரத் தொண்டனாக பணியாற்றிய தி.த. கனகசுந்தரம்பிள்ளை, நாவலர் சி. வை. தாமோதரம்பிள்ளை ஆகியோர் வழி நின்று தமிழ் கூறும் நல்லுலகில் நூற்பதிப்பு முயற்சிகளுக்கு முன்னவராகவும் அதே சமயம் ஆராய்ச்சி மனோபாவம் கொண்ட மாணவர் குலாமை உருவாக்கிய நல்லாசிரியராகவும் விளங்கினார். உ.வே.சாமிநாதையர் போன்ற பலருடன் தோளோடு தோள் நின்று உழைத்தவர் தி.த. கனகசுந்தரம்பிள்ளை.' என்றார்.

நூலகர் ஆர். எஸ். தம்பையா பேசுகையில், "19 நூற்றாண்டிலே தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு மூலகாரர்களாகி விளங்கிய பலருள் ஈழநாட்டவரின் பங்கு மிகப் பெரியதாகும். ஆறுமுகநாவலர் சி.வை. தாமோதரம்பிள்ளை தி.த. கனகசுந்தரம்பிள்ளை மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை என இவ்வரிசையில் பல அறிஞர்களைக்குறிப்பிடலாம். தி.த. கனகசுந்தரம்பிள்ளை தமிழ் பேராசிரியராக கடமை ஆற்றியவர் ஏட்டுச் சுவடிகளில் காணப்பட்ட பழந்தமிழ் நூல்களை அரிதில் முயன்று வெளியிட்ட பலருக்கும் துணை ஆசிரியராக அமைந்தார். தமிழ்ப் பணியையே முழு மூச்சாகக் கொண்டு பணியாற்றிய தி. த. கனகசுந்தரம்பிள்ளை சிறந்த தமிழறிஞர் எனக் கூறலாம் என்று கூறினார். (கு)

"ஐ. தே. க. ஆட்சிவந்ததும்

# கிளிநொச்சியில் 46 குளங்கள் திருத்தப்படும்"

கிளிநொச்சி, செவ்.

"ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் கிளிநொச்சியில் உள்ள 46 தூர்ந்துபோன குளங்களும் புனரமைக்கப்படும். அத்துடன் கிளிநொச்சியில் விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவி, விவசாய வளத்தின் பெருக்கநடவடிக்கைகளும் எடுக்கப்படும்."

இவ்வாறு கிளிநொச்சியில், ஐ. தே. கட்சியின் தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்து புதிய காரியாலயத்தையும் திறந்துவைத்துப் பேசுகையில், கிளிநொச்சி ஐ. தே. கட்சி வேட்பாளர் திரு. என். கனகசூரியர் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் 2 ஆயிரம் பேருக்குகிளிநொச்சியில் ஒரு பாரிய வீடமைப்புத் திட்டத்தை உருவாக்கி, ஒவ்வொருவருக்கும் வீடுகட்ட வசதிகள் செய்து கொடுக்கப்படும். ஐந்துக்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் கிளிநொச்சியில் நிறுவப்படும்" என்று கூறினார்.

வடபிரதேச குடியேற்ற அதிபர்கள் சமாஜ செயலாளர் திரு. ஆர். தயரட்ண பேசுகையில், ஆட்சிக்குவருவது ஐக்கிய தேசியக் கட்சிதான் என்றும் தன்னாதிக்க இறைமை உள்ள சோஷலிச பொருளாதார அரசியல் அமைப்பை இந்நாட்டில் உருவாக்குவோம் என்றும் கூறினார்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் கே. தவராஜா, தில்லைநாதன், அமிர்தலிங்கம், பரமசாமி உட்படப்பலர் பேசினர்.

"25 வேட்பாளர்களையும்

# தமிழ் ஈழத்துக்குப் போராட அனுப்பிவையுங்கள்!"

## 'அமிர்' வேண்டுகோள்

பண்டத்தரிப்பு, செவ்.

"எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழர்விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் 25 வேட்பாளர்களும் வெற்றி பெற்றால், தமிழ்ஈழம் அமைப்பதற்கு ஒன்றுசேர்ந்துபோராடுவார்கள், பங்களாதேசத்தில் முஜிபுர்ரகுமான் தலைமையில் அவாமிலீக்கட்சி தனிநாடு கோரி போராடி வெற்றியீட்டியதைப்போல இங்கும் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் தனிநாடு கோரி பரந்த அளவிலான பேரியக்கத்தை ஆரம்பிப்பார்கள்"

இவ்வாறு பண்டத்தரிப்பு நவீன சந்தை மைதானத்தில் நடைபெற்ற அமரர் செல்வாவின் அஞ்சலிக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர்களில் ஒருவரான திரு அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். திரு. நடராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தந்தை செல்வா காட்டிய வழியில் நின்று அவர் விட்டுச்சென்றுள்ள தமிழ்ஈழம் என்னும் இலட்சியத்தை அடைய முயற்சிப்பதே அவருக்கு நாங்கள் செலுத்தக்கூடிய பெரிய அஞ்சலியாகும். கூட்டணியின் ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் பாதுகாத்து கட்டுக்கோப்புடன் தொடர்ந்தும் இயக்கச்செய்தால்தான் எமது இலட்சியத்தை சென்று அடையலாம். இன்று தென்னிலங்கைச் சிங்கள மக்கள் கூட்டணியின் ஒற்றுமையையும் கட்டுக்கோப்பையும் கண்டு சிந்திக்கின்றார்கள். இவர்கள் எல்லாம் ஓரணியில் சேர்ந்து உரிமைக்காக குரல் கொடுக்கின்றார்கள் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள், இந் நேரத்தில் எங்கள் தனிப்பட்ட சுயநலன்களை மறந்து, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் ஒத்துழைப்பது அவசியமாகும். வட்டுக்கோட்டை தொகுதி மக்கள் திரு. திருநாவுக்கரசுவுக்கு வாக்களித்து ஆதரித்து வெற்றியடையச் செய்வதன் மூலம் எங்கள் கூட்டணியின் ஒற்றுமையும் கட்டுக்கோப்பும் மேலும் வலுவடையும் என்று நம்பலாம்.

### தந்தை வழி தான் ஒரேவழி

அடுத்து உடுவில் தொகுதி முன்னாள் எம். பி. திரு. வீ. தர்மலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது: 'தந்தைசெல்வா ஒருநேர்மைமிக்க அரசியல்வாதியாக இலட்சியப்பற்றுமிக்க தலைவராக வாழ்ந்துகாட்டியுள்ளார். அவரின் இறுதி அஞ்சலி நடைபெற்றபோது இதுவரை எந்தத் தலைவருக்கும் இல்லாத முறையில் தமிழினம்முழுவதும் திரண்டுவந்து அஞ்சலிசெலுத்தியது. இதற்குக் காரணம் அவர் காட்டிய வழிதான் தமிழினத்தின் ஒரேவழி என்பதை மக்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இதே போல எதிர்வரும் பொதுத் தேர்தலிலும் தந்தை செல்வா காட்டிய வழியில் தொடர்ந்து போராட திடசங்கற்பம் பூண்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு பேராதரவு கொடுத்து வெற்றியடையச் செய்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை'

வட்டுக்கோட்டை தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. திருநாவுக்கரசு பேசுகையில் கூறியதாவது: 'வட்டுக்கோட்டைத் தொகுதியில் குடியரசு சட்டத்திற்கு ஆதரவளித்தவருக்கு எதிராக நான் கூட்டணியால் நிறுத்தப்பட்டிருக்கிறேன். தமிழ்க்காங்கிரஸ் கட்சியிலிருந்து அவரைவெளியேற்ற நான் முக்கிய பங்கெடுத்திருந்தேன். தேர்தலிலும் அவரை மீண்டும் தேசியப் பேரவைக்கு செல்லமுடியாதவாறு செய்வதே எமது நோக்கமாகும்'

துரையப்பா கொலை வழக்கில் சிறை மீண்ட திரு. த. சந்ததியார், சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு, இளைஞர் பேரவையைச் சேர்ந்த எஸ். சிவதாசன், க. சுந்தரமூர்த்தி, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், என்.ரி. செல்லத்துரை க. தெய்வேந்திரம், யாழ் மாவட்ட சனசமூக நிலைய சமாஜ வலிதென்மேற்குக்கிளைச் செயலாளர் நா.மா. கந்தசாமி ஆகியோரும் இக்கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

"தமிழர் வாழும் 33 நாடுகளில்

# முதலில் தனிநாடு அமைப்பதுநாமே'

— துரைராஜசிங்கம்

யாழ்ப்பாணம், புதன்

"தமிழர் ஆண்ட நாடுகளில் இறுதியாக ஆட்சி வலிமையை இழந்தும் நம்நாடு இன்று தமிழர் வாழும் முப்பத்துமூன்று நாடுகளில் முதலில் தனிநாடாகப்போவதும் நம்நாடே"

இவ்வாறு முன்னாள் உதவி மேயர் ஆ. துரைராஜசிங்கம் கூட்டணி இராசாவின் தோட்ட தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

வண்ணை ஆனந்தன் பேசுகையில் "தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கைகளுக்காக இயங்கக் கூடிய போராடக் கூடிய ஒருவரே எமக்குதேவை 72-ம் ஆண்டில் கூட்டணியை அமையுங்கள் என்று சொன்னபோது பயத்தினால் இயங்க மறுத்தவர்கள் அமைப்பாளராக மறுத்தவர்கள் எல்லாம் இன்று கூட்டணிக் கொள்கைகளை முன்வைத்துப் போட்டியிடுகிறார்கள்" என்றார்.

தமது பேச்சின் முடிவில் வண்ணை ஆனந்தன் சட்டத்தரணி யோகேஸ்வரனுக்கு போடப்பட்ட மாலைகளை சிறுவர்களிடம் கேள்விப் போட்டி ஒன்றை வைத்துப் பரிசிலாக வழங்கினார்.

இக் கூட்டத்தில் இளைஞர் பேரவை பொன் மதிமுகராசா கிருஷ்ணசாமி கனகராசா யாழ் வேட்பாளர் சட்டத்தரணி யோகேஸ்வரன் உட்படப் பலர் பேசினர். (சி)

சென்னை, மே 31

தமிழ்நாட்டில் அமுலிலிருந்த மின்வெட்டு நாளை முதல் ரத்தாகிறது.

தமிழ்நாட்டில் சில பிரிவுகளில் 25 சத வீதம் மின்வெட்டு அமுலில் இருந்தது.

# நாட்டை வளம்படுத்தினால் தீயசக்திகள் தலையெடுக்காது

## இளைஞர்களுக்கு உதவி அரசாங்க அதிபர் அறிவுரை

தெல்லிப்பழை, செவ்.

'இந்நாட்டின் எதிர்காலம் இளைஞர்களிலேயே தங்கியிருக்கிறது. இளைஞர் புரியும் ஒவ்வொரு நன்முயற்சிக்கும் முதியோர் நல்லாதரவு நல்கவேண்டும். இளைஞர்களின் ஆக்க முயற்சிகள் உடல் உழைப்புகள் யாவும் கிராம நகர மக்களின் முன்னேற்றத்தையும் பொருளாதாரத்தையும் வளம்படுத்த உதவவேண்டும். எனவே இவர்களின் நலனில் முதிர்ந்த அறிஞர்களும், செல்வந்தவர்களும் அக்கறை கொண்டு கூடிய உதவிபுரிந்து அவர்களின் சக்தியை விரயமாக்காது தக்க வழியில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதேதருணம் இளைஞர்களும் நாட்டுநலன்கருதி கட்டுப்பாட்டுடன் நடந்து நாட்டுவளத்தை மேலோங்கச் செய்தால் தீயசக்திகள் தலையெடுக்காது நாடு முன்னேறும்'

இவ்வாறு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. சொ. அமிர்தலிங்கம் ஏழாலை மேற்கு சரஸ்வதி சன சமூக நிலைய ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து உரையாற்றும் போது கூறினார்.

இளைப்பாறிய அதிபரும் மேற்படி நிலையத் தலைவருமான திரு. ச. சொக்கலிங்கம் தலைமையில் கொண்டாடப்பட்ட விழாவை பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். குமாரசாமி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் தன்னிகரில்லாத் தலைவனும், முதிர்ந்த அரசியல் ஞானியுமாகிய அமரர் எஸ். ஜே. வீ. செல்வநாயகத்தின் உருவப்படத்தை திரு. வி. தர்மலிங்கம் திரைநீக்கம் செய்து வைத்து அஞ்சலி செலுத்தினார்.

தலைவர் தமது தலைமையுரையில் ஏழாலையிலுள்ள பெரிய தம்பிரான் கோவில், அம்பலவாணேஸ்வரர் கோவில் ஆகிய ஏழு கோவில்களுக்கும் குளத்துக்கும் செல்லும் வீதியைத் திறப்பதற்கும் ஒதுக்கப்பட்ட பணத்தில் அதனைத் திருத்துவதற்கும் 'பள்ளஞ்சீமா' ஒழுங்கையின் மின் இணைப்புக்கு முற்பணங்கட்டி பதின்மூன்று வருடங்கள் முடிந்தும் மின்விநியோகம நடைபெறாமல் தடைப்பட்டிருப்பது குறித்து வருத்தம் தெரிவித்ததுடன் கிராம வரியிறுப்பாளர்களும், கிராமாட்சி மன்றம் கிராமாபிவிருத்திச் சங்க நிர்வாகிகளும் பரஸ்பர மனப்பான்மையுடன் கலந்து பேசி இவற்றிற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

திரு. பொன் சபாபதி, திரு. மு. சின்னத்தம்பி உட்படப் பலர் உரை நிகழ்த்தினர். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ஈ)

## இன்று தீர்த்தம்

நெல்லியடி, புதன்

பருத்தித்துறை ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த தீர்த்த உற்சவம் இன்று புதன்கிழமை நடைபெறுகிறது. (அ)

## அரசியல்—

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் மீண்டும் வைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை எழுப்பியதைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கின. நூற்றுக்கணக்கானவர் உயிரிழந்தனர்.

இதன்பின்னர் நிபந்தனையுடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் பிரதமர் சுல்பிஹார் அலி பூட்டோ விரும்பினார். ஆனால் எதிர்க்கட்சிகள் இதற்கு மறுத்தன. இதன்பின்னர், மீண்டும் சமரசப்பேச்சு வார்த்தைக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை 3-ம் திகதி எதிர்க்கட்சிகளுடன் பிரதமர் பூட்டோ பேச்சுவார்த்தை நடத்துவார்

## அன்னை சாரதா கட்டுரைப் போட்டி

நெல்லியடி, செவ். பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமத்தினால் அகில இலங்கை ரீதியில் அன்னை சாரதாதேவி பற்றிய கட்டுரைப் போட்டியொன்று மாணவர்களுக்கிடையே நடத்தப்படவுள்ளது.

இம்மாதம் 25-ம் திகதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இப் போட்டிக்கான விண்ணப்பங்கள் யாவும் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இப் போட்டிக்கான ஏற்பாடுகளை பருத்தித்துறைஸ்ரீசாரதா சேவாச்சிரமக் காரியதரிசி திரு. இரத்தினசபாபதி கவனித்து வருகிறார். [அ]


வெலிங்டன் [யாழ். நகர்]
ரஞ்சன் நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
நீலமலைத்திருடன்

லிடோ போன்: 7693 [யாழ். நகர்]
விஜயகுமார்—லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

ராஜா (யாழ். நகர்)
ஏ. வி. எம். ராஜன்
கிருபானந்தவாரியார்
திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)

REGAL (JAFFNA)
Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
3-rd CROWDED WEEK
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்
Next Attraction
THE TAMARIND SEED (Color)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15 & 9.45
RUSSIAN ROULETTE
Thrilling - Exciting - Demanding
(சில நாட்களுக்கு மட்டும்)

கடைசி வாரம்
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன், (இருவேடங்களில்)
உஷா நந்தினி, சௌகார் ஜானகி
மனிதனும் தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மன் கலர்)


### இன்று

## மாதைஷயூர், கொச்சிக்கடை அந்தோனியார் கொடி

அண்டிவரும் அடியார்க்கு ஆனந்தமானவனாய், தேடி வரும் அன்பர்க்குத் தேனாக இனிப்பவனாய், கூடி வரும் குறையெல்லாம் நாடித் தீர்ப்பவனாய்த் திகழும் புனித அந்தோனியாரின் திருவிழாக்கள் இன்று கொடியேற்ற வைபவத்துடன் கோலாகலமாக ஆரம்பமாகின்றன.

நீலக் கடலின் ஓரத்தில் அமைந்திருக்கும் கொழும்பு கொச்சிக்கடை ஆலயத்திலும், ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் சமய வேறுபாடின்றி, மொழி வேறுபாடின்றிப் பல்லாயிரக்கணக்கான மக்கள் மலர்களுடனும், மெழுகுவர்த்திகளுடனும் பக்தி மேலிடக் காத்திருக்கும் காட்சியைக் காணலாம். கொழும்பு கொச்சிக்கடை ஆலயத்தைப் பொறுத்தமட்டில் ஆலயத்தின் உள்ளே அழகிய சித்திரங்களாக கிறீஸ்துவின் அன்பனும் அந்தோனியாரின் வாழ்க்கை வட்டம் சித்தரிக்கப்பட்டுள்ளது.

அந்தோனியாரைக் கிறீஸ்தவர்கள் ஒரு புனிதராகவே வழிபடுகிறார்கள். தெய்வம் அல்ல. தெய்வத்தின் அருள் பெற்ற சாதாரண மனிதர் அந்தோனியார்.

அந்தோனியார் சிறு வயது முதலே தெய்வ பக்தி உடையவராக இருந்தாரென்பதை அவருடைய சிறு பராய வாழ்க்கைக் குறிப்புக்கள் எடுத்தியம்புகின்றன. அவருடைய பக்தி வைராக்கியத்தினால் சிறுவனாக இருக்கையிலேயே அவருடைய வேண்டுதல்களுக்கு இறைவன் செவிசாய்த்தான் என அவருடைய வாழ்க்கைக் கதைகள் கூறுகின்றன.

சிறியவனாக இருக்கையில் செபத்தால் இறைவனின் அன்பைத் தேடிய அந்தோனியார் தபத்தால் தன்னுடைய இளமைப் பராயத்தில் பரமனை நாடிச் சென்றார். குருமடத்தின் சமையற்காரனாக அந்தோனியார் வாழ்ந்திருக்கின்றார். அக்காலத்தில் அவர் தானும் ஒரு குருவாக மாறுவதற்கு ஆசையுடன் எடுத்த முயற்சிகளுக்கு அவர் படிப்பறவர், பாமரன், ஏழை என்ற காரணங்கள் அணைபோட்டன. ஆயினும் அஞ்சா நெஞ்சமுடன் அன்பன் கிறீஸ்துவின் தொண்டனாக -சீடனாக -குருவாக மாறிட அவர் உழைத்தார்.

இவ்வாறாக அவர் குருமடத்தில் வாழ்ந்த காலத்தில் அவருடைய அறையிலே ஒளிப்பிரபை வீசியது. ஓடோடிச் சென்று பார்த்தவர்கள் செயலற்று நின்றார்கள். அவர் அமைதியாகச் செபித்துக் கொண்டிருந்தார். அவருடைய ஒரு கையிலே பாராளும் பரமன் கிறீஸ்து பாலகனாய் அமர்ந்திருந்தார். அன்புருவாய்த் தென்புருவாய் என்புருவாய்ச் சிலுவையிலே உயிரீந்த உத்தமன் கிறீஸ்து உயிருள்ள குழந்தையாய் அவருடன் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தார். இந்தத்தெய்வீகக்காட்சியை கண்டவர்கள் அன்று முதல் அந்தோனியாரின் தவத்தின் மகிமையைத் தெரிந்துகொண்டார்கள் (இத் திருக்காட்சியின் கோலத்திலேயே அந்தோனியார் சுருபங்கள் அமைக்கப்பட்டுள்ளன.)

தவத்தின் உருவாய் திகழ்ந்த உத்தமன் அந்தோனியார் கிறீஸ்தவகுருவாக திருநிலைப் படுத்தப்பட்டார். அதன் பின்பு அவருடையவாழ்வு பரமன் கிறீஸ்துவிற்கு சான்று பகரும் வாழ்வாக மாறியது. கிறீஸ்து உண்மைத்தெய்வமென உலகிற்கு உணர்த்த முயன்றார். அச்சமயம் கிறீஸ்தவ மதம் பலசோதனைகளை எதிர்நோக்கிய நேரம் எதற்கும் அஞ்சாது எதிரிகளுடன் கூட அன்பான முறையில் வாதாட அவர் தவறவில்லை. ஒருமுறை எதிரிகளின் சூழ்ச்சியால் அவருடைய நற்போதனைகளைக் கேட்க மனிதர் யாருமே வரவில்லை. இதனால் கோபமுற்ற அந்தோனியார் அலைகடலை நோக்கிப் பிரசங்கித்தார் அவருடைய பிரசங்கத்தைத் கேட்கவென மீனினங்கள் ஓடோடி வந்தன. இவ்விதம் இயற்கைமேல் தனது சக்தியை காட்டி இறைவனின் மொழியை இதயமற்ற மனிதரும் ஏற்றிடச் செய்தார்.

கிறீஸ்தவர்களின் வணக்கத்திற்குரிய பொருளாகிய திவ்விய நற்கருணையில் கிறீஸ்து தான் மெய்யான ஆன்ம-சரீரமுடைய மனிதனாக மறைந்து வாழ்கின்றார் என்ற மறை உண்மையை வெளிப்படுத்த கழுதைகளுடன் வந்த எதிர் அணியார் முன் திவ்விய நற்கருணையை எடுத்துச் சென்றார். கழுதைகள் அவருடைய எசமானர் கொடுத்த பசும் புல்லைக் கூட உண்ண மறுத்து ஓடோடி வந்து தம்முடைய இருமுன்னங் கால்களையும் மடக்கி மண்டியிட்டு கிறீஸ்துவின் திருவுடலாம் தேவநற்கருணையை வணங்கின. இவ்வாறாக தன்னுடைய வாழ்வு முழுவதும் தான் கையிலே தாங்கிய அன்பன் கிறீஸ்துவின் சாட்சியாக திகழ்ந்த அவரின் திருநாக்கு இன்றுவரை காலத்தால் அழிக்கமுடியாத பொருளாக வத்திக்கான் பரிசுத்த பொருட்கள் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

—சூ. யோ. பற்றிமாகரன்

## கூட்டுச்—.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கட்டத்தில் பிராந்தியக் கட்சிகளின் துணையுடன் நல்லாட்சி நடத்த காங்கிரஸ் விரும்பியது. இதற்குகிடைத்த பலனை காங்கிரஸ் இப்போது உணருகிறது. தமிழ்நாட்டில் மாநிலக்கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் நின்றதன் மூலம் காங்கிரஸுக்கு இங்கு அழிவுஏற்பட்டுவிட்டது. இந்த நிலையை காங்கிரஸ் நன்கு புரிந்துவிட்டது. 'இத்தவறு இனிமேல் நடக்கமாட்டாது'' என்றும் திரு. சவான் கூறினார்.


வெஸ்லி [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
இருவர் உள்ளம்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
விஜயகுமார்-சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை


## குமாரசாமி கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், புதன் சாவகச்சேரித் தொகுதியில் போட்டியிடும் திரு. வி. குமாரசாமியின் கட்டுப்பணத்தைச் சாவகச்சேரித்தொகுதி தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணியினர்சேர்த்துள்ளனர். வாலிப முன்னணி அமைப்பாளர் திரு. ஆர். பரமேஸ்வரன் நாளை திரு. குமாரசாமியிடம் கட்டுப் பணத்தைக் கையளிப்பார்கள் (க-அ)

## நிர்வாகிகள்

கிளிநொச்சி, செவ்வாய் முரசுமொட்டை இளைஞர் விவசாயக் கழக வருடாந்தக் கூட்டம் திரு. அல்பேட் தலைமையில் கழக காரியாலயத்தில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சூ. அல்பேட் உப, தலைவர்: தனபாலச்சந்திரன் செயலாளர்: இ. யோகநாதன், உப செயலாளர்; க. மகேந்திரன், - செல்வி பதுமநிதி, பொருளாளர்: செல்வி. எஸ். யோகேஸ்வரி, மற்றும் எண்மர் கொண்ட நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. (ஈ)

• • •

## கோப்பாய் சமசமாஜ வேட்பாளர்

யாழ்ப்பாணம், புதன் கோப்பாய்த் தொகுதியில் சமசமாஜக்கட்சி சிறுபான்மை தமிழர் ஒருவரை அபேட்சகராக நிறுத்தியுள்ளது.

உரும்பராய் நவசக்தி சனசமுக நிலைய தலைவரும், முன்னாள் பாண்டியன் குள விளைபொருள் பெருக்க குழு தலைவருமான திரு. வி. நடராசாவே, கோப்பாயில் சமசமாஜக் கட்சி வேட்பாளராக போட்டியிடுவார்.

நல்லூர்த் தொகுதியிலும், சமசமாஜ கட்சி, அபேட்சகரை நிறுத்தவிருப்பதாக, சமசமாஜக்கட்சி வடபிரதேச செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் தெரிவித்தார்.

## இன்று பொன்னாடை போர்த்துவர்

யாழ்ப்பாணம், புதன் பௌராணிக வித்தகர் தெல்லியூர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மாவுக்கு வினை வேலி மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வைத்து மாவை ஆதீனகர்த்தா வித்தியாபூஷணம், பிரம்மஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்கள் இன்று பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார்.

பிரம்மஸ்ரீகுகசர்மா கடந்த பத்துத்தினங்களாக இந்த ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தையொட்டி கந்தபுராண விரிவுரை உபந்யாசத்தை நிகழ்த்தி வருகிறார். சங்கீதபூஷணம் சி. விஜுசித்தம்பி தலைமையில் இச்சொற்பொழிவு நடந்துவருகிறது.

திரு. அருள்வேலழகன், சங்கீதபூஷணம் திரு. விஜுசித்தம்பி, சைவப்புலவர் திருமதி. உமையம்மை சிவசம்பு உட்பட பலர் வாழ்த்துரை வழங்குவர். (அ)

## முதலிடம்

பண்டத்தரிப்பு, செவ்வாய் சண்டிலிப்பாய் வலி, தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வருடாந்த மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டியில் பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூகநிலையம் 42 புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டியில் வலி தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்கள் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் விளையாட்டுக் கழகங்கள் ஆகியன பெருமளவில் கலந்துகொண்டன. வடலியடைப்பு அரசடி சனசமூகநிலையம் 40-புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூகநிலைய விளையாட்டுக்கழகம் 30-புள்ளிகளைப் பெற்று மூன்றும் இடத்தையும் பெற்றன. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி. தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கி. கோபாலரத்தினம் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். விளையாட்டுத்துறை உத்தியோகஸ்தர் திரு. ா. கந்தசாமி நன்றி கூறினார்.

## போயா தினத்தையொட்டி இன்று சினிமா காட்சியில்லை

ஈழநாடு
The EELANADU

# “காணித்தேர்வை மறுபரிசிலனே செய்க”

கிளிநொச்சி, செவ். கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தில் கிளிநொச்சியில் வாழும் வீடு, காணி இல்லாத மக்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் வளங்கி அவர்களுக்கும் முன்னுரிமை வளங்கும்படி இப்பகுதி இளைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சாதாரண ஏழை மக்களின் பிரச்னைக்குத் தீர்வு காணும்படியும், காணித்தேர்வை மறு பரிசிலனை செய்யும்படியும் அமைச்சரைத் துண்டுப்பிரசுரம் மூலம் இவர்கள் கோரியுள்ளனர். (அ)

## நல்லூரில் இராமநாதன்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் தொகுதியில் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர் சார்பில் திரு. க. இராமநாதன் போட்டியிடுவார்.

சாவகச்சேரியில் நேற்று முன்தினம் நடந்த காங்கிரஸ் ஆதரவாளர் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

## மிளகாய் உற்பத்தி வீழ்ச்சி

கிளிநொச்சி, செவ்வாய்

கிளிநொச்சிப் பிரதேசத்தில் இம்முறை உப உணவுப் பயிரான மிளகாய் உற்பத்தி மிகக்கூடி இருந்தும், சென்ற வாரம் தொடர்ந்து பெய்த பெருமழையால் மிளகாய்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது' அத்துடன் கன்றுவாடல், பழம்அழுகிவிழுதல், கொப்பு வாடல் குருமன் நோய்' புழுவெட்டல், போன்ற நோய்கள் உற்பத்தியை பாதித்துள்ளது.

விஸ்வமடு, திருவையாறு, கனகபுரம், வட்டக்கச்சி, கனகாம்பிகைத்திட்டம் போன்ற குடியேற்றத்திட்டங்களில் உள்ள விவசாயிகளே இந்நிலைக்குள்ளாகியுள்ளனர். (ஈ)

## விண்ணப்பங்கள்

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சித் தொகுதி அபிவிருத்திச்சபையின் கீழ் கல்மடு உபஉணவு பயிற்செய்கைத் திட்டத்திற்கு பெண்களைத் தெரிவுசெய்வதற்கான காணிக் கச்சேரி விண்ணப்பங்கள் கிளிநொச்சிப்பகுதி நிரந்தர வசிப்பிட படித்த பெண் பிள்ளைகளிடம் இருந்து கோரப்படுகின்றன.

க. பொ. த. சித்தியடைந்த 18–35 வயதிற்கிடைப்பட்ட விவசாய அனுபவம் உடையவர்கள் இம்மாதம் 13-ந் தேதிக்குப் பிந்தாமல் அபிவிருத்திசெயலகம், கிளிநொச்சி என்ற விலாசத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும்படி கேட்கப்படுகின்றனர். 15-ம் தேதி காணிக் கச்சேரிக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் (ஈ)

## ‘சனசமூக நிலையங்கள் கிராமிய மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யவேண்டும்”

பண்டத்தரிப்பு, செவ்.

“சனசமூக நிலையங்கள், சமுதாயத்தின் அடிமட்டத்திலுள்ள மக்களைப் பெரும்பாலும் பிரதிநிதித்துவப் படுத்தி வருகின்றது. இவ்வாறான மக்களினால் தான் எங்கள் கலைகலாச்சாரங்களைப் பாதுகாத்து வளர்க்க முடியும், சனசமூக நிலையங்கள், முக்கியமாக கிராமிய மக்களுக்கு செய்திகளை தெரிவிக்கும் நிலையங்களாக மட்டும் இயங்காமல், அவர்களுடைய தேவைகளை அறிந்து நிறைவேற்றிவைக்கும் ஸ்தாபனங்களாகக்கடமையாற்ற வேண்டும். இந்தவகையில் சங்கானைமேற்கு சனசமூக நிலையம் கடந்த 25 ஆண்டுகளாக சிறப்பாகப்பணியாற்றி வருவதைக் காண மகிழ்ச்சியாக இருக்கிறது”

இவ்வாறு சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கலை விழாவுக்கு தலைமை வகித்துப் பேசுகையில் யாழ் மாவட்ட சன்சமூக நிலையங்களின் சமாஜ உபதலைவர் பண்டிதர் கி. யோ. ஆசிநாதர் குறிப்பிட்டார். இவ்விழாவில் பிரதமவிருந்தினர்களில் ஒருவராகக் கலந்துகொண்ட ‘ஆத்மஜோதி’ஆசிரியர் திரு. நா. முத்தையா உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது

“மனிதன் மனிதனக வாழ வழிகாட்டுவதுதான் சமயம். சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல, சமயத்தைப்பிரிந்து ஒருவன் ஒழுக்கமுள்ளவனகவும் பண்பாடுள்ளவனகவும் வாழ்வது மிகவும் சிரமம், தர்மம் எது நீதி எது என்று சமயங்களே விபரமாக எடுத்துக் கூறுகின்றன. கோவில்களில் மட்டும் இறைவனை வழிபாடு செய்வதுடன் நின்றுவிடாது தினசரி வாழ்க்கையிலும் வழிபாட்டையும் இறைவணக்கத்தையும் இணைத்துக்கொள்ளவேண்டும், இளவயதிலே நற்பழக்க வழக்கங்களை பின்பற்றி வாழ்ந்தால் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக வளர முடியும்”

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ இணைச் செயலாளர் திரு. எஸ். கே, சண்முகலிங்கம் பேசுகையில் “இன்று நாட்டின் பெரும் பொறுப்புக்கள் யாவும் இளம் சந்ததியினரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன. எனவே இளைஞர்களும் யுவதிகளும் சனசமூக நிலையங்களில் அங்கம் வகித்து சமூக வளர்ச்சிக்கான பணிகளில் சேவையாற்ற வேண்டும். சனசமூக நிலையங்களின் சேவைகளை ஒன்றிணைத்து வலுப்படுத்தவே சமாஜ அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சமாஜ இயக்கம் விரிவடையவும் வலுவடையவும் சனசமூக நிலையங்கள் அத்தனையும் ஒத்துழைப்புக்கொடுக்க வேண்டும்” என்று கூறினார்.

திருவாளர்கள் எம். நடராசா தி. சிவானந்தன், ம. சிறிஸ்கந்தராசா, சோ. சோதீஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர்கள். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## மொரார்ஜி தமிழ்நாடு வருகிறார்

சென்னை, மே 31

தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொள்ளும் பொருட்டு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் தமிழகம் வருகிறார்.

இவர் ஜூன் மாதம் 3, 4 ம் திகதிகளில் தமிழ்நாட்டின் முக்கியபகுதிகளில் பிரசாரம்செய்வார். இவருடன் கூட மின்சக்திஅமைச்சர் திரு.பா.ராமச்சந்திரனும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார். (கி)

## இணக்கசபை

மட்டக்களப்பு, செவ்வாய்

ஈச்சந்தீவு கிராமசபை பிரதேச இணக்கசபை உறுப்பினர்களின் நியமனப்பத்திரம் வழங்கும் வைபவம் கிராமசபைமண்டபத்தில் நடைபெற்றது. நீதி அமைச்சைச் சேர்ந்த திரு. கே. சச்சிதானந்தன் நியமனப்பத்திரங்களை வழங்கினர். மட்டக்களப்பு முன்னாள் இரண்டாவது பிரதிநிதி திரு.இராஜன் செல்வநாயகமும் இதில்கலந்துகொண்டார்.

## கட்டுப்பணம் செலுத்தினர்

யாழ்ப்பாணம், புதன்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் நல்லூர்த் தொகுதியில் சுயேட்சையாகப் பேட்டியிடுவதற்கு யாழ். இந்து இளைஞர் சங்கத்தினதும் திறனாய்வுக் கழகத்தினதும்தலைவரும்சட்டத்தரணியுமானதிரு. ராஜராஜேஸ்வரன் தங்கராஜா யாழ். கச்சேரியில் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தினர்.

யாழ். மாஜி எம். பி. திரு. சி. எக்ஸ் மாட்டினும் தமது கட்டுப்பணத்தைச் செலுத்தினர்.

யாழ். தொகுதியில் மீண்டும் போட்டியிடும் இவரது கட்டுப்பணத்தை முஸ்லீம் வட்டாரம், கொழும்புத் துறை, குருநகரிலுள்ள அவரது ஆதரவாளர்கள் செலுத்த முன்வந்தபோதும் அவர் தமது சொந்தப்பணத்தையே செலுத்தினர்.

## வடபகுதியில் சி. பா. தமிழர் நால்வர் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதியில் எதிர்வரும் தேர்தலில் 4 சிறுபான்மைத் தமிழர்கள் போட்டியிடுகின்றார்கள்.

உடுப்பிட்டித் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் திரு. ரி. இராசலிங்கம்போட்டியிடுகின்றார்.

யாழ்ப்பாணத் தொகுதியில் கம்யூனிஸ்ட்கட்சிசார்பில் முன்னாள் நியமன எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம் போட்டியிடுகின்றார்.

கோப்பாய்த் தொகுதியில் கம்யூனிஸ்ட்கட்சிசார்பில் திரு. கே. தவஞானமும், சமசமாஜக் கட்சிசார்பில் திரு. வி. நடராசாவும் போட்டியிடுகின்றனர். (க-அ)

## இன்று

யாழ்ப்பாணம், புதன்

உடுப்பிட்டித் தொகுதியில், தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளராக போட்டியிடும் திரு. இராசலிங்கமும், மன்னாரில் கூட்டணி வேட்பாளராக போட்டியிடும் திரு. எஸ். சூசைதாசனும், இன்று காலை 10 மணிக்கு தந்தை செல்வாவின் சமாதியில் அஞ்சலி செலுத்தி உறுதிமொழி எடுப்பார்கள்.

நியமனம் தொடர்பான கடிதங்களைப் பெற்று இன்று தேர்தல்பிரசாரத்தை இவர்கள் தொடங்குவார்கள் (க)

## ஆயுர்வேத-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாகும்வரை உண்ணவிரதத்தை மேற் கொண்டுள்ளார்கள்.

அதேவேளை கல்லூரியினுள் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களுக்கு திரு. கெங்காதரன் விளக்கங்கொடுத்துக் கொண்டிருந்தார். இச் செய்கையால் ஆத்திரம் கொண்ட பொதுமக்கள் கல்லூரிக்குள் புகுவதற்கு முயன்றவேளை சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் அவர்களிடம் தாம் தமது ஆத்ம சுத்தியுடன் இத்தகைய சாத்வீகபோராட்டத்தில் ஈடுபட்டிருப்பதால் தமக்கு எப்படியும வெற்றிவரும் என்றும் இதற்கு மாறாக எந்த வன்செயலும் இங்கு இடம் பெறாபடி தாம் மிகப்பணிவாக வேண்டுவதாகவும் கேட்டுக்கொண்டனர். (கா)

## சிவாவுக்கு—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வரவேற்பில் பல கூட்டணி அபேட்சகர்களும், நல்லூர்த்தொகுதி கூட்டணி அமைப்பாளர் திரு.மு.ஆலாவசுந்தரம். சட்டத்தரணி இ. விஸ்வநாதன், சட்டத்தரணி சி. நாகராசா, சட்டத்தரணி எஸ். தம்பித்துரை, மற்றும் பலர் உரை நிகழ்த்துவார்கள் திரு. எம். சிவசிதம்பரத்தின் கட்டுப்பணத்தை கொக்குவில் கோண்டாவில்பகுதி சிறுபான்மைத்தமிழர்கள் இவ்வரவேற்புக்கூட்டத்தில் கையளிக்கவிருக்கின்றனர்.

நல்லூர்த்தொகுதித் தமிழா விடுதலைக்கூட்டணி அமைப்பாளர் திரு. எம். ஆலாலசுந்தரத்திடம் கையளிக்கப்படும். (க-அ)

## மாநிலஉரிமை

சென்னை, மே 31

தி. மு. க. தேர்தல் விஞ்ஞாபனத்தில், புதுவைக்கு மாநில உரிமையை தி. மு. க. கோரிள்ளது. இவ்விஞ்ஞாபனத்தில் புதுவை பற்றிய பதின்மூன்று கோரிக்கைகள் அடங்கியுள்ளன. புதுவைக்கு பல்கலைக்கழகம், சர்க்கரை ஆலை அமைத்தல் குடிசைமாற்று வாரியதிட்டத்தை அமுல்படுத்தல், தாழ்த்தப்பட்டமக்களுக்கு மனைப்பட்டா வழங்குதல் போன்றவையும் இவற்றில் அமையும். (கி)

## ராஜன் கொலை டி. ஐ. ஜி.க்கு பிணை மறுப்பு

புதுடில்லி, மே31

மாணவன் ராஜன் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப் பட்டது தொடர்பாக கைதுசெய்யப்பட்ட கேரள பொலிஸ் டி. ஐ. ஜி ஜெயராம் படிக்கல் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனுவை மாவட்ட நீதிபதி வாசுதேவன் நாயர் நிராகரித்தார்.

இதுதொடர்பாக கைது செய்யப்பட்ட பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் புலிக்கோடி நாரயணின் பிணை மனுவையும் நீதிபதி நிராகரித்தார். இவர்களை வெளியே விட்டால் சாட்சிகள் பயமுறுத்தப்படலாமென அவர் அச்சம் தெரிவித்தார். (கி)

## ஆட்சிப் பொறுப்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்க முடியாது, மக்கள் நலனுக்கென திரட்டப்படும் அரசு நிதி மக்கள் நலனுக்காகவே செலவிடப்பட வேண்டும் தமது சொந்தச் செலவுபோக மிகுதிதான் மக்களுக்கு செலவிடப் படவேண்டுமென்ற நிலை நாம் ஆட்சி அமைத்தால் விலகும்.

### உண்மையான தி மு க எமது கழகமே

லட்சோபலட்சம் தூய, தியாகத் தொண்டர்களின் ஆதரவுடன் உண்டாக்கப்பட்டதுதான் எமது அ.இ.அ.தி.மு. கழகம். அண்ணா அவர்கள் அமைத்த தி மு.க. இப்போது அ. இ. அ. தி. மு. கவாகமாறி இருக்கிறது. அ. இ. தி. மு.க. தான் உண்மையான தி. மு.க. என்பதை மக்கள் ஏற்று அங்கீகரித்து விட்டார்கள் என்பதற்கு நடந்துமுடிந்த லோக்சபா தேர்தல் முடிவே சான்று.

தேர்தலில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்டுடனும், முஸ்லிம் லீக்குடனும், பார்வாட்பிளாக்குடனும், உழைப்பாளர் கட்சி ஆகியவற்றுடன் கூட்டுச் சேர்ந்துள்ளோம். இக் கூட்டணிக்கு மக்களாதரவுதேவை.

### பெண்களுக்கு சம உரிமை

எமது ஆட்சி ஏற்பட்டால் மத்தியில் ஆங்கில மொழி ஆட்சிமொழியாக இருக்கும் என்ற கோரிக்கையுடன் இந்தி திணிப்பை எதிர்ப்போம். தமிழக மக்களின் வறுமை நீங்கப் பாடுபடுவோம். கிராமப் புறங்களில் வசதிகள் பெருக்கப்படும் பெண்களுக்கு சமவாய்ப்பு அளிக்கப்படும். மாநில அரசின் அதிகாரம் வலுவுடன் இருக்கும். ஜாதி, மத பேதங்கள் தலைதூக்க இடமளிக்கப்படமாட்டாது. “ஒன்றே குலம் ஒருவனே தேவன்” என்ற நெறிமுறையைப்பேணி தூய்மையான மக்களாட்சி நடத்துவோம். வரதட்சணை ஒழிக்கப்படும். கலப்பு மணத்துக்கு ஆதரவளிக்கப்படும்” (உ)

## நாஞ்சில்மீது குற்றச்சாட்டு

சென்னை, மே 31

அகிலஇந்திய அண்ணா தி. மு கழக துணைப்பொதுச்செயலாளர் திரு. நாஞ்சில் மனோகரன் எம். பி. ஆகிய பின்னர் அண்ணா நகரில் மாளிகை ஒன்றைக் கட்டியிருப்பதாகவும் இதற்கான பணத்தை அவர் எப்படிப் பெற்றாரென்று மக்களுக்குதெரியப்படுத்தவேண்டுமென்றும் தி. மு. க. கோரியுள்ளது.

அவ்வாறே அமைப்புச்செயலாளர் லாயிட்ஸ் றோட்டில் மாடி வீடு கட்டியது பற்றியும், மதுரைமுத்து பங்களாக்கள் வாங்கியது பற்றியும் மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டுமென்றும் தி. மு. க. கோரியுள்ளது. [கி]

## மரண அறிவித்தல்

உரும்பராய்- திருமதி தங்கம்மா தம்பிமுத்து

காலமானர். இவர் காலஞ்சென்ற தம்பிமுத்துவின் அன்பு மனைவியும், திருநெல்வேலி வேலாயுதபிள்ளையின் சகோதரியும், காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் மாமியாரும், திருமதி தவலட்சுமி செல்வரத்தினத்தின் அன்புத் தாயாரும் இராஜ மகேஸ்வரன், திருமதி சந்திரவதனி இராஜ மகேஸ்வரன், சந்திரமோகன், சந்திரகலா ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார். அன்னரின் ஈமக்கிரியை இன்று 1-6-77 புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் உரும்பராயில் நிகழும். உற்றரும் உறவினரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிரோம். 6334

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.